# கற்பகம்



பிறப்பும் உலவும் பிசகாப்
புனிதம் நிறையும்
அமைதி மிளையும் நிறைவு
இதய அடியில்
உபாதை தருமோர்
கொடுமைப் பறிப்பும் புதிய
உதிப்பும்.

† †

விதியையும் மீறிய
சாந்தப் புன்னகை மீண்டும்
சிலுவையில்
மீண்டும்... மீண்டும்...
அறையப்படுகிற துயரிலும்
அதுமீறிய
பாசம் தூய்மை தாய்மையுள்
சிலிர்க்க
மீட்பராய் பாலன்!

மலர் 6
இதழ் 9
மார்கழி 1985
விலை: ரூபா 2.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்கழி

1985

மலர் 6

இதழ் 9

# பிரதேச மூலவளமும் அபிவிருத்தியும்

பேச்சு ஒரு புறம். செயல்கள் வேறு புறம். பேச்சுக்கும், செயலுக்கும் இடையே பாரிய முரண்பாடு. இந்த நிலையே இன்றைய உலகில் மலிந்துள்ளது. அரசியலில் இந்த நிலை தாண்டவமாடுவதாலேயே சமாதானப் பேச்சுக்கள் பாரெங்கும் பலராலும் பேசப்படுவதையும், யுத்த பேரிகைகளின் முழக்கங்களையும் காண முடிகின்றது. அபிவிருத்தியைப் பற்றிப் பேசுபவர்கள் தாம் பேசியதைச் செயற்படுத்த வேண்டும்.

வட பகுதியின் இயற்கை மூலவளங்களில் பனைமரம் பரந்த பரப்பைக் கொண்டுள்ளது. இது எமது பிரதேச மூலவளம். இயற்கையான இம் மூல வளத்தை மனித வளத்துடன் பொருத்தமாக இணைத்துப் பயன் பெறுவதன் மூலம் பாரிய வருமானத்தைப் பெற முடியும். பனைமரம் திட்டமிடப்படாத வகையில் இயற்கையிலே வளர்ந்து பயன் அளிக்கின்றது. ஆனால் இப் பயன்களையும் திட்டமிட்டவாறு பெற்றுப் பயன்படுத்தத் தவறியிருந்தோம்.

வெளியீடு
வடமாகாண
தெ. ப. பொ. கூட்டுறவு
சங்கங்களின்
சமாஜம்
330, கே. கே. எஸ். வீதி
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 2 2 7 1 3

அட்டைப்படக் கவிதை
கல்வயல்
வே. குமாரசாமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கு ஸ்தாபன ரீதியான அமைப்புக்கள் உரு வாக்கப்படாமல் இருந்ததே காரணமாகும்.

இதன் விளைவாக 1972 ம் ஆண்டு வடபகு தியில் பனம் பொருட் கூட்டுறவுச் சங்கங்கள் உருவாக்கப்பட்டன. இவை பனைத் தொழிலு டன் பன்னெடுங் காலம் பின்னிப் பிணைந் துள்ள தொழிலாளர்களைக் கூட்டுறவு இயக்கத் தில் இணைத்துப் பயன்பெறச் செய்தன. இன் றைய அரசின் தோற்றக் காலத்தில் பனை அபி விருத்திச்சபை ஸ்தாபன ரீதியாகப் பனை அபி விருத்தியை நோக்கமாகக் கொண்டு உருவா கப்பட்டது. இச்சபை பிரமிக்கத்தக்க அளவில் பனம் பொருள் அபிவிருத்திநடவடிக்கைகளை மேற்கொண்டு வருவது பாராட்டிற்குரியது.

அண்மையில் பாராளுமன்றத்தில் முன்னாள் பிரதமரும், மூத்த அரசியல் வாதியுமான காலி எம். பி. கலாநிதி தஹநாயக்கா உரை யாற்றும் போது தனது நீண்ட ஆயுளுக்கான காரணங்களில் ஒன்றாகப் பனை வெல்லப் பாவ னையையும் குறிப்பிட்டிருந்தார். தமிழ்த் தேசிய தினசரி ஒன்று இதனைத் தனது ஆசிரிய தலை யங்கத்தில் சுட்டிக் காட்டிப் பனம் பொருட்கள் கடத்தலுக்குரியபொருட்களாகக் கவர்ச்சி பெற வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தது. அந் நியப் பொருட்களின் மோகத்திலிருந்து எம்மை விடுவிப்பதின் மூலமே இதனைச் சாதிக்கலாம்.

பொது மக்களின் ஒத்துழைப்பும், பங்கெடுப் பும் முழுமையாகக் கிடைக்கின்ற பொழுதே அபிவிருத்தி மேம்பாடு பெற வாய்ப்பு உண் டாகும். ஏனெனில், மக்களது ஆதரவு முழு மையாகக் கிடைக்காத போது ஸ்தாபன ரீதி யான எந்த நடவடிக்கைகளும் முழுமையான அபிவிருத்தியை ஏற்படுத்திவிட முடியாது.
எனவே பனை அபிவிருத்தி காணப் பல்வேறு தரப்பினரதும், பல தரப்பட்ட ஆதரவையும் ஒத்துழைப்பையும் "கற்பகம்" வேண்டிநிற்கின் றது. பிரதேச மூல வளமே எமது பொருளா தார வளம் என்பதை நாம் ஒவ்வொருவரும் நினைவில் கொள்ளுவோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுபத்தாறு ஆண்டுகளின் பின் விரைந்து வரும் ஹேலியின் வால்வெள்ளி

★ க. செல்வி, பீ. ஏ.

எண்ணற்ற விண்வெளி விஞ்ஞானிகள் காத்திருந்த ஹேலியின் வால்வெள்ளி பூமிக்கு அண்மையில் தோன்றிவிட்டது. பெருந்தலையும், திரண்ட நடுப்பகுதியும், நீளமான வாலும் கொண்ட இவ் வால்வெள்ளி எழுபத்தாறு வருடங்களுக்கு ஒரு முறையே பூமியை சமீபிக்கிறது. சூரியனை ஒருமுறை சுற்றிவிட்டுத்திரும்பிச் சென்று விடும் இது 1910 ம் ஆண்டுதான் கடைசித் தடவையாக வந்தது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான், தமிழ் நாட்டில் காவலூர் போன்ற இடங்களின் அவதான நிலையங்களின் அதிசக்தி வாய்ந்த தொலைநோக்கிகளில் இவ் வால்வெள்ளி தென்பட்டுவிட்டது.

1985 டிசம்பர் முதல் 1986 ஏப்பிரல் வரையிலான காலப் பகுதியில் இந்தத் தூமகேதுவைத் தொலைநோக்கியின் உதவியுடனும், வெறும் கண்களாலும் காண முடியும். பெப்ரவரியில் மட்டும் அதைப்பார்க்கமுடியாது. அந்த மாதத்தில் சூரியனை நெருங்கிச் செல்கிறது.

1985 நொவம்பர் 27ம் திகதி பூமியிலிருந்து 9 கோடியே 27 லட்சம் கிலோ மீற்றர் தொலைவிலும், சூரியனிலிருந்து 23 கோடியே 20 லட்சம் கிலோ மீற்றர் தொலைவிலும் இது பிரயாணம் செய்யும். 1986 பெப்ரவரி 9 ம் திகதி சூரியனை மிகநெருங்கிவிடும். அன்று சூரியனிலிருந்து 8 கோடியே 55 லட்சம் கிலோ மீற்றர் தூரத்திலும் பூமியிலிருந்து 23 கோடியே 90 லட்சம் கிலோ மீற்றர் தூரத்திலும் இது இருக்கும்.

மறுபடியும் ஏப்பிரல் 11ம் திகதி இது பூமியை மிக நெருங்கும். பூமியிலிருந்து 6 கோடியே 28 லட்சம் கிலோ மீற்றர் தொலைவுக்கு வந்து விடும்.

1910 ல் தூமகேது பூமியை நெருங்கிய போது தெளிவாக தென்பட்டது போல இந்தத் தடவை தென்படாது. இதற்கு அதன் சுற்றுப்பாதையும், பூமியினதும், சூரியனதும் சேந்திர நிலையுமே காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது விநாடிக்கு 43 மைல் வேகத்தில் பூமியை நோக்கி வருகிறது. அது பூமியை நெருங்கும் போது அதன் அருகில் சென்று ஆராய்ச்சிகள் செய்வதற்கு விஞ்ஞானிகள் தயாராகவுள்ளனர்.

பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட 'கயோட்டோ' என்ற செயற்கைக்கோள் கடந்த ஜூலை மாத முற்பகுதியில் விண்வெளிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. மணிக்கு 35000 மைல் வேகத்தில் விண்வெளியைத் துளைத்துச் செல்லும் இக்கோள் ஹேலியின் வால்வெள்ளியின் பிரமாண்டமான நடுப்பகுதியை ஊடறுத்துச்செல்லும்.

ரஷ்யா "வேகாஸ்" எனப்படும். ஆய்வு கூடமொன்றை விண்வெளிக்கு ஏவி விட்டுள்ளது. இது வால்வெள்ளிக்கு முன்னால் அதன் சுற்றுப் பாதையில் பிரயாணம் செய்து வால்வெள்ளி பற்றிய விபரங்களைச் சேகரிக்கும்.

460 கோடி ஆண்டுகளுக்கு முன் உலகமும், மற்றக் கிரகங்களும் தோன்றிய போதே இந்த வால்வெள்ளியும் தோன்றியிருக்கலாம் என விஞ்ஞானிகள் கருதுகிறார்கள்.

வால்வெள்ளியின் வால் பகுதியில் உறைநிலையில் வாயுக்கள் உள்ளன. புழுதியும் படிந்துள்ளது. இவை மற்றைய கிரகங்களும், உலகமும் தோன்றிய போதுதான் தோன்றியிருக்க வேண்டும். இவற்றைச் சரிவர ஆராய்ச்சி செய்தால் உலகின் தோற்றம், ஜீவராசிகளின் உற்பத்தி உட்பட பல வினாக்களுக்கு விடைகாண முடியும் என விஞ்ஞானிகள் நம்புகின்றனர்.

வால்வெள்ளி 76 வருடங்களுக்கு ஒரு முறை சூரியனைச் சுற்றிவருவதை அறிந்தவரே "எட்மன் ஹேலி" என்பவர். இவ்வால் வெள்ளியும் அவரது பெயராலேயே "ஹேலியின் வால் வெள்ளி" என்று வழங்குகிறது.

இவ் வால்வெள்ளியை முதலில் கண்டவர் யாரென்பது தெரியாது. 1301 ல் "கயோட்டோ டிபொன்டன்" என்ற இத்தாலிய ஓவியர் தமது ஓவியமொன்றில் தீட்டியுள்ளார். கி. மு. 240 ம் ஆண்டளவில் சீன வானசாஸ்திரி "சூமாசியன்" இதைப்பற்றித் தமது நூலொன்றில் எழுதியுள்ளார்.

837ஆம் ஆண்டில்தான் ஹேலியின் வால்வெள்ளி பூமியை மிகவும் நெருங்கிவந்துள்ளது. 30லட்சம் மைல் தொலைவுவரை வந்து சென்றுள்ளது. வானவெளியின் பாதித்தூரத்துக்கு அது நீண்டு நின்றது. அதன் வால் மட்டும் 20 கோடி மைல் நீளமுடையதாயிருக்கும் என விஞ்ஞானிகள் மதிப்பிடுகின்றனர்.

வால்வெள்ளியின் வரவினால் பல தீமைகள் விளையலாம் எனச் சோதிடர் சொல்கிறார்கள். மன்னரின் மரணத்துக்கும், நாடுகளின் வீழ்ச்சிக்கும் இவ் வால்வெள்ளியின் வரவு முன்னறிவிப்பாகும் என்று சொல்கிறார்கள். 1910ல்வந்ததையடுத்தே உலக மகாயுத்தம் மூண்டதாம்,

... 10 பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எமது உதவியும், பரிவும் யாருக்குத் தேவையோ அவர்களை எம்மை அறியாமலேயே வேதனைக்குள்ளாக்குகிறோம்.**

**நரம்புத் தளர்ச்சியால் துன்பம் அடைபவர்களது விடயத்தில் இது உண்மையான விடயம்!**

உங்களுக்கு நரம்புத் தளர்ச்சியா? அதற்காகப் பரிகாரம் தேடுகிறீர்களா? நீங்கள் இந்த நரம்புத் தளர்ச்சியினால் ஏராளமான துன்பங்கள் அனுபவித்துக் கொண்டிருக்கலாம்.

களில் அனேகர் இந்தப் பிரிவில் இருக்கிறார்கள். சிலர் தமது பிரச்சினைகளை வெளியாகச் சொல்லிவிடுவர். தமது கவலைகளை மனதுக்குள்ளே அடக்கித்து வெந்து கொண்டிருப்பவர்களுமிருக்கிறார்கள்.

# உங்களுக்கு நரம்புத் தளர்ச்சியா!

இந்நோயையுடையோருடன் வசிப்பவர்கள் அல்லது பணி

# மனக் கவலையை அறவே விரட்டுங்கள்!

நரம்புத் தளர்ச்சியுள்ளவர்கள் கோபம் கொள்வதும், அமைதியிழப்பதும், சாதாரண ஒரு நிகழ்ச்சியே. டாக்டர்களிடம் வரும் நோயாளிகளில் பாதிப் பேர் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்கள். அத்துடன் வேறு பல நோய்க் குறிகளையும் கொண்டவர்களாக வருகிறார்கள். மேல் மட்டக் குடியைச் சேர்ந்தவர்

புரிபவர்கள் அவர்களது கவலையை உணர்ந்து பரிவு காட்டும் தன்மையற்றவர்களாக இருக்கலாம்.

**டாக்டர் சீ. ஆர். ஆண்டர்ஸன்**

உள்ளுக்குள்ளே துன்பம் அனுபவித்து வெந்து கொண்டிருக்கும் அவர்களை இன்னும் வருத்திக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுமையான வார்த்தைகளால் ஏசி நிலைமையை மோசமாக்கலாம்.

பொதுவாக நமது உதவியும் பரிவும் யாருக்குத் தேவையோ அவர்களை நம்மையறியாமலே வேதனைக்குள்ளாக்குகிறோம். நரம்புத்தளர்ச்சியால் துன்பமடைபவர்களது விடயத்தில் இது உண்மையான விடயமே.

வெளிப்பார்வைக்கு வேதனையற்றவர்கள் போலத் தெரியும் அவர்கள் உள்ளமோ கடுமையான வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்கலாம். அவர்களது மனப் போராட்டங்கள் முகத்தில் தெரிவதில்லை.

நரம்புத் தளர்ச்சியால் துன்புறும் நபர்கள் தூண்டிலே விட்டு விடுபடத்துடிக்கும் மீன் போன்றவர்கள். ஓடையில் சுதந்திரமாக நீந்தும் மீனுக்கு அதன் கஷ்டம் எங்கே புரியப் போகிறது? கூரிய முட்களைக் கொண்ட தூண்டில் எத்தனை கொடிய வேதனையைக் கொடுக்கும் என்பது அந்த மீனுக்கு மட்டும்தான் புரியும்.

இதைப் போலவே மன இறுக்கத்தால் வேதனை அனுபவிப்பவர்களின் உள்ளம் எரிமலையாகக் குமுறி வெடிக்கலாம். மற்றவர்கள் அதைப் புரிந்து கொள்வது கடினமாக இருக்கலாம்.

இந்த நரம்புத்தளர்ச்சிக்காக நீங்கள் பயம் கொள்ளாதீர்கள். நீங்கள் மட்டும் உலகிலே துன்பம் அனுபவிக்கிறீர்கள் என்று எண்ணாதீர்கள். உலகில் மிகப் பிரபலமான நபர்களில் நீங்களும் ஒருவர். புத்திசாலிகள் அனைவரும் இந்த வகுப்பைச் சேர்ந்தவர்களே. அவர்களது உணர்வுகள் மிகக் கூர்மையானவை.

இத்தகைய தனிச் சிறப்பு வாய்ந்தவர்கள் எளிதில் கோபம் கொள்கிறார்கள். இவர்கள் தாம் செய்வனவற்றைத் திருந்தச் செய்கிறார்கள். அதனாற்றான் அவர்களது பணி பாராட்டப்படுகிறது. அப்பணியில் சிறிது பிழை கண்டாலும் அவர்கள் மனமுடைந்து போவார்கள். இத்தகைய மக்கள் சுறுசுறுப்புடன் உலகில் பல காரியங்களைச் சாதிக்கிறார்கள். இந்த நோயுடையவர்களில் அநேகர் மிகுந்த திறமைசாலிகள்.

அவர்களிற் சிலர் தமது உணர்வுகளை மூடி மறைத்துக்கொள்ளத் தெரிந்தவர்கள். சராசரி மனிதனை விட அவர்களது திறமைகள் அதிகமாக இருக்கிறது. அவர்கள் தங்கள் பயங்களை முறியடித்துத் தங்களை ஒரு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர வேண்டும்.

அவர்கள் தங்கள் நோக்கங்களை ஆராய்ந்து பார்த்தால் எட்டிப் பிடிக்க முடியாத ஒரு இலட்சியத்தை முன் வைத்துத் தவறான பாதையில் அவர்கள் முயன்று கொண்டிருப்பதைச் அவதானிக்கலாம்.

உலகின் மாபெரும் தலைவர்களும், கலைஞர்களுமே இந்நிலையினர்தான். இவர்களிற் சிலர் கூச்சவுணர்வுடையவர்கள். சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மினி' கவிதை

### புதுப் 'பூ'

கற்பகமே
சொற்பதம் நிறைந்த- இன்
சொற்களஞ்சியமே
மாதம் ஒரு முறை
மலரும் மலரே
புதுப் பொலிவுடன் நீ
பூத்ததைக் கண்டும்
புதுமை நிகழ்ச்சிகள்
பொலிந்ததைக் கண்டும்
பூரிக்கிறேன்
நிறைவடைகின்றேன்.

– சி. இராஜராஜேஸ்வரி

✻

### கன்னிமலர்கள்

சீதனப் பேய்க்காற்றே
நீ சுழன்றடிக்கும் போது
உன்னால் உதிர்ந்துபோகும்
கன்னி மலர்கள் தான் எத்தனையோ
கள்ளமேயறியாத
கன்னிப்பெண்களின்
காலவேடுகளைப் புரட்டுகின்ற உன்
அசுரக் குணம் தான்
அழிந்து போகும் நாள்
அரிவையர் வாழ்வில்
விடிவைத்தரும் நாள்

– ஜேசி

✻

### வீழ்ந்து போகும் அநீதிகள்!

அநீதிகளின் முன்னே
நீதி நியாயங்கள்
ஆழக்குழிகளில்
உருத் தெரியாமல்
புதைக்கப்படலாம்.
ஆனால்,
காலதேவனின்
கடுகதி ஓட்டத்தில்
ஆழக்குழிகளில்
அறுகு போல் வேரூன்றி
நீதி நியாயங்கள்
முளைவிட்டெழும்போது
பாவம் அநீதிகள்
வேரற்ற மரமாகி
விழ்ந்து தான் தீரும்.

– க. செல்வி

தம்மைச் சுற்றியுள்ள சூழலை அவதானிக்கிறார்கள். மனதில் எரிச்சல் கொள்ளும் தன்மை பொதுவாக எல்லோரிடமும் காணப்படுகிறது

நல்ல பக்குவமான மன நிலையுடையவர்களது உள் அமைதி அதிகமாகக் கெடுவதில்லை. அப்படிக் கெட்டாலும் தமது நிதானத்தை இழக்க மாட்டார்கள்,

நரம்புகள் தமது நல்வாழ்வுக்கு முக்கியம் வாய்ந்தவை. சிறு குழந்தையின் உடலில் கூட இலட்சக் கணக்கான நரம்புகளின் உதவி இல்லாவிட்டால் குழந்தையின் தொழிற்பாடுகள் நடக்காது. எல்லா நரம்புகளும் மிக இறுக்கமாக ஒன்றுடன் ஒன்றிணைந்து ஒத்துழைக்கின்றன. நரம்பு மண்டலமே தீர்மானம் செய்யும் திறனை நமக்கு அளிக்கின்றது.

சிலருக்கு நரம்புத்தளர்ச்சி பரம்பரையாக ஏற்படுகிறது. சூழ்நிலையும் இதற்குக் காரணம். இத்தகைய பலவீனங்களை அடக்கியாளப் பழக வேண்டும்.

பின்பற்ற வேண்டிய சில குறிப்புகள்:-

நரம்புத் தளர்ச்சியால் பாதிக்கப்பட்டிருப்போர் பின்வரும் சில முக்கியமான காரியங்களை நடைமுறைப்படுத்தலாம்.

(1) நேரமெடுத்து இளைப்பாறுங்கள். சோர்வுற்ற உங்கள் உடலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவோர் தமிழில் தெய்வப் பணி

எல்லாம் தரவல்ல தெய்வப் பணியில்
எடுக்கும் பொருளை விருத்தி செயச்
செல்வம் வளர்ந்திடும் வல்லவர்களொன்றாய்ச்
சேர்ந்து வரவேண்டும் தோழர்களே.

●

பொன்னி மழை வாழி பூமி நலம் வாழி
மன்னுயிர்கள் வாழியறம் வாழி – எந்நாளும்
கற்பகம் போலீயும் கடவுட் பணி வாழி
நற்றமிழும் வாழ் நயந்து.

- சோமசுந்தரப் புலவர்

●

தெய்வக் கற்பகத் தாரிந்தத் திசையெலாஞ் செழித்திருக்க
வைய மீதினிப்புக்காக வாடியிங்கலேவோர் தன்மை
கையதில் வெண்ணெயேந்திக் கடைத்தெருவெங்கும் சுற்றி
நெய்யினுக் கலைந்து தேங்கும் நிபுணரைப் போலவாச்சே

-பொன்னுலைக் கிருஷ்ணபிள்ளை

●

தினையளவு போதாச் சிறு புன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - மனையழகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி

- கபிலர்

---

பழுதடைந்த திசுக்களைச் செப்பனிடத்தக்கதாகநேரம் அவசியம் கொடுக்கப்பட வேண்டும்.

(2) பொறுமையாயிருக்க வேண்டும். நரம்புத் தளர்ச்சிக்கு ஆளானோர் வெகுவிரைவில் குணமடையமாட்டார். அதனால் அவசரிப்படக்கூடாது.

(3) ஆர்வமூட்டும் சிறப்பான வேலைகளைத் தெரிந்தெடுத்து உங்களைப்பற்றியே நினைக்காமல் அதிலேயே மனதைச் செலுத்துங்கள்.

(4) எளிய ஆனால் தரமான உணவை அமைதியான சூழ்நிலையில் உண்ணுங்கள். சுத்தமான நீரை அருந்துங்கள். இது இரத்த வோட்டத்தைச் சீராக்கி உடலினின்றும் கழிவுப் பொருட்கள் வெளியேற உதவும்.

(5) உடற்பயிற்சி செய்யுங்கள். நரம்புகளையும், தசைகளையும் நல்ல நிலையில் வைத்து பாதுகாக்கும்.

(6) கடந்தகாலத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். அதை மாற்றியமைக்க முடியாது.

(7) மனதை அரிக்கும் குற்ற உணர்வுகளைக் களைந்து எறியவும்.

(8) வாழ்வில் ஒரு நம்பிக்கையோடு வாழும் மனப்பாங்கை விருத்திசெய்யுங்கள். பிரகாசமான எதிர்காலத்திலும், உங்கள் மேலும் நம்பிக்கை வையுங்கள்.

இப்படிச் செய்வீர்களானால் அது உங்களுக்கு மனரம்மியத்தை அளிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ திக்கம்
சிவயோகமலர்
ஜெயக்குமார்

# இரு பொருள் கூறும் சிலேடைக் கவிகள்

சிலேடைக் கவிகள் படிப்போர் மனதைச் சிந்திக்க வைப்பன. சிலேடைக் கவிகள் பாடுவதற்கும் ஒரு தனித்திறமை தேவை. அத்திறமை கொடையாக ஒரு சிலருக்கே அமைந்தது போலும். இக் கவிதைகள் பாடுவதில் காளமேகப் புலவர் கைதேர்ந்தவராயிருந்தார். இம் மென்ருல் எழுநூறும், எண்ணூறும், அம்மென்ருல் ஆயிரமும் பாடும் காளமேகமல்லவா? அவரிடத்தில்சிலேடைக் கவி தானுய் வருவதில் வியப்பில்லையே!

ஒரு முறை திருமலைராயனுடைய மலையைச் சுற்றிப் பார்த்துக் கொண்டு வருகிருர் காளமேகம்! அம்மலையிலே இல்லாத பொருளே இல்லை. மணம் வீசி நிற்கும் மலர்கள் அவரது மூக்கைத் துளைத்தன. அழகும், மணமும் நிறைந்த மலர்கள் ஏனே அவரது கவனத்தைக் கவரவில்லை. அவரைக் கவர்ந்தது ஒரு ஆமணக்க மரம்தான்.

மலையடிவாரத்தைப் பார்க்கிருர். அங்கே அந்த நேரம் ஒரு களிறு போய்க் கொண்டிருந்தது. ஆமணக்க மரத்தையும், அந்தக் களிற்றையும் ஒப்பிட்டு நோக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார். கார்மேகமாகிக் கவி மழை பொழிகிறார் சிலேடையாக.

"முத்திருக்கும்கொம்பசைக்கும்
மூர்த்தண்டேந்தி வரும்
கொத்திருக்கும் நேரே குலை
சாய்க்கும்- எத்திசைக்கும்
தேமணக்குஞ் சோலைத் திரு
மலைராயன் வரையில்
ஆமணக்கு மால் யானையாம்."

"முத்திருக்குமாம்" ஆமணக்குக்கு நல்ல வெண்ணிறமான முத்தையொத்தவித்துக்களுண்டு. யானையும் முத்தையொத்த வெண்ணிறத்தைத் தந்தமாகப் பெற்றுள்ளது. "மூரித்தண்டேந்தி வரும்" என்று சொல்லுகிறானே எப்படி? ஆமணக்கோ நிலத்தைக் கிழித்துக் கொண்டுதான் ஆமணக்காக வெளிவருகிறது. யானையைப் பார்த்தால் அதுவும் தனது ஓங்கி வளர்ந்த தந்தத்தில் தேக்கு போன்ற மரங்களை ஒடித்துத் தன் தும்பிக் கையால் ஏந்தி மதத்தோடு ஓடி வரும்.

"கொம்பசைக்கும்" என்ற சொல்லைப் பார்ப்போம். வளர்ந்துள்ள ஆமணக்குத் தன்னிடமுள்ள கொம்புகளை அசைத்துக் காட்டும். யானையும் அவ்வாறு தான். தன்னிடமுள்ள தந்தக்களை (கொம்புகளை) அசைத்துக் காட்டும். "கொத்திருக்கும்" என்றால் ஆமணக்கில் கொத்துக் கொத்தான பூக்கள் உண்டு. மத யானையை அடக்கப் பாகன் அதன் முதுகிலே குத்துவான். அதனால் அதன் தலையில் உண்டான வடுக்கள் பார்ப்பதற்குப் பூங்கொத்துகள் போல இருக்கும். காய்த்து முற்றிய குலைகளை ஆமணக்கானது சாய்த்துக் காட்டும். யானையும் தன் எதிரே தெரிந்த வாழைக்குலைகளை

எழுபத்தாறு....

- 4ம் பக்கத் தொடர்

வால்வெள்ளி விஷவாயுவான சைனைட்டை உதிர்த்து விட்டுச் செல்வதாயும் அதனால் பல நோய்கள் ஏற்படுவதாயும் விஞ்ஞானிகளிடம் கூட அச்சம் நிலவியுள்ளது. ஆனால் அது எந்த வாயுவையும் சொரிந்து விட்டுச் செல்வதில்லையென வானிலை விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

சாதாரணமக்கள் இந்த வால் வெள்ளியை தெருவிளக்கு வெளிச்சம் விழாத ஒரு மேட்டுப்பாங்கான இடத்துக்குச் சென்று பார்வையிடலாம். ஆனால் சந்திரன் பூரணமாயிருக்கக் கூடாது, சிறிதாக இருந்தால் பரவாயில்லை. மேகங்களற்ற நிர்மலமான வானமாய் இருத்தல் மிக நல்லது.

1986 ஜனவரி நடுப்பகுதியில் சூரியா அஸ்தமனத்துக்குப் பிறகு மேற்குத்தொடுவானில் வால் வெள்ளியின் முதல் தோற்றம் தென்படும், சாதாரண தொலை நோக்கியால் அல்லது வெறும் கண்ணால் கூடப்பார்க்க முடியும் என்று சொல்கிறார் கலிபோர்ணியாவில் உள்ள ஜெட் உந்துகை ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த "ஸ்ரீபன் எட்பர்க்" என்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரே சாய்த்துக் காட்டும். இதைத்தான் அவர் "நேரேகுலை சாய்க்கும்" என்று கூறுகிறார்.

இரண்டுக்கும் இப்படியான ஒற்றுமைகள் இருப்பதால் ஆமணக்கும், மால்யானையும் ஒன்றென்று கூறுகிறார் புலவர். ஒரு பொருளை இன்னொரு பொருளோடு பொருத்திக் காட்டுவதற்கு நுண்ணிய அறிவு வேண்டும். அந்த அறிவு அவரிடத்தில் பரந்து இருந்திருக்க வேண்டும்.

அக்காட்சியைக் கண்டு களி டாடிய அவர் அங்கிருந்து புறப்படுகிறார். ஏதேதோ காட்சிகள் அவர்முன் விரிகின்றன. அங்கொரு குதிரை தென்படுகிறது. அது ஓடிவருகிறது. அந்தக் குதிரையைக் கற்பனையில் இழுத்துப் போகிறார் கவிஞர். எங்கே தெரியுமா? காவிரி ஆற்றங்கரைக்கு! ஏன் தெரியுமா? குதிரையைப் போல அதுவும் ஓடுகிறதே. இரண்டையும் ஒற்றுமைப்படுத்துகிறார். பாட்டும் அவர் நினைத்ததும் ஒழுங்காக அமைகிறது.

"ஓடும் சுழிசுத்த முண்டாகுந் துன்னலரைச்
சாடும் பரிவாய்த் தலைசாய்க்கும் – நாடறியத்
தேடு புகழான் திருமலைராஜன் வரையில்
ஆடுபரி காவிரியாமே."

"ஓடு"மாம். குதிரை வீரமானதென்றால் விரைவாக ஓடும். காவிரி நதியும் விரைவாக ஓடக் கூடியதே. "சுழிசுத்தம் உண்டாம்" என்று சொல்கிறாரே எப்படி? குதிரைக்குக் குற்றமற்ற சுழிகள் உண்டு. காவிரி நதிக்கும் நீர்ச் சுழிகள் உண்டுதானே. "துன்னலரைச் சாடும்" என்று சொல்வதைப் பார்ப்போம். ஆற்றல் மிக்க குதிரையோ பகைவர் எதிர்ப்பட்டால் உடனே கொல்லக் கூடியது, காவிரியாறோ சுழியிற் சிக்கிய மலர்களைச் சாடி இழுத்துச் செல்லும்.

"பரிவாய் தலை சாய்க்குமாம்" குதிரையானது மிக மிக இரக்கத்தோடு தனது தலையைச் சாய்த்துக் காட்டுமாம். காவிரியும் மாந்தர் நீர் வேட்கை கொள்ளும் போது 'குடியுங்கள்' என்பது போலப் பணிவாகத் தலைசாய்த்து ஓடுமாம். அவரது சிலேடை அருமையாக அமைகிறது.

மலையை விட்டு இறங்குகிறார் காளமேகம். இன்னும் எங்கே சிலேடை பாடுவோம் என்ற நினைப்போ என்னவோ? அங்குமிங்கும் பார்க்கிறார். அவர் கண்களில் அகப்பட்டது ஒரு நெற்களஞ்சியம். இதற்கு முன்னேபோர்க்களத்தில் பார்த்த களிற்றின் ஞாபகம் அவருக்கு வருகிறது. அதை இங்கே கூட்டி வருகிறார். அவரது கற்பனைத் திறனுக்கு முன்னே இரண்டும் ஒரு சேர இணைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாரிக் களத்தடிக்கும் வந்த
பின்பு கோட்டை புகும்
போரிற் சிறந்து பொலிவாகும்
-சீருற்ற
செங்கோல மேனித் திருமலை
ராயன் வரையில்
வைக்கோலு பால் யானை
யாம்"

"வாரிக் களத்தடிக்கு" மாம். வயலிலிருந்து கொண்டு வந்து நெற்களத்தில் ஓங்கியடிப்பார்கள் வைக்கோலை. யானையும் எதிரியை நிலத்தில் இழுத்து வந்து தும்பிக்கையால் ஓங்கியடிக்கும். 'வந்த பின் கோட்டை புகும்' என்று சொல்கிறாரே எப்படி? அடிக்கப்பட்ட வைக்கோல் பிடிபிடியாகக் கட்டப்பட்டுக் கோட்டை போல அடுக்கி வைக்கப்படும். களத்திலே போர் முடிந்ததும் களிறு தம் மன்னரின் கோட்டைக்குள் வந்து புகும்.

"போரிற் சிறந்து பொலிவாகு" மாம். வைக்கோல் போர் போல் குவிக்கப்பட்டு நெல் மணிகளைப் பொலிவாக்கி மலை போல் தோற்றத்தைக் கொடுக்கும். தேரில் பூட்டப்பட்டுப் போருக்குச் செல்லும் களிறானது பெரும் படை, குதிரைப்படை இவற்றைக் காட்டிலும் பொலிவோடு விளங்கும்.

நமக்கு வைக்கோலைத் தெரியும். நாம் அலட்சியம் செய்யும் பொருளிதொன்று. ஆனால் யானைக்கீடான பெரும் பொருளாக்கிக் காட்டுகிறார் புலவர்.

வழியால் போய்க் கொண்டிருக்கிறான் புலவன். அங்கே ஒரு பாம்பு அதுவும் விஷப்பாம்பு. முன்பு எள்ளு செக்கிலே நெரிபட்டதைப் பார்த்திருக்கிறார். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கிறார். ஒருமையைக் காண்கிறார். அவனது கவிக்கட்டு அவிழ்கிறது.

இதோ பாட்டு!

"ஆடிக் குடத்தடையுமாடும்
போதே இரையும்
மூடித்திறக்கின் முகங்காட்டும்-
ஓடிமண்டை
பற்றிப் பரபரெனும் பாரிற்
பிண்ணாக்கு முண்டாம்
உற்றிடு பாம்பெள் ளெனவே
யோது"


"ஆடிக்குடத்தடையுமாம்" பாம்பானது ஆடியபடி குடத்துக்குள் அல்லது பெட்டிக்குள் நுழைந்து விடும். எள்ளும் செக்கில் நுழைந்து ஆடியபின் குடத்துக்குள் எண்ணெய் ஆக நுழையும். "ஆடும் போதே இரையும்" என்று சொல்லுகிறாரே எப்படி? ஆடும் போது பாம்பு இரைவது வழக்கம் தான். ஆனால் எள்ளோ எப்படி இரையும்? இரையுமாம். எப்படியென்றால் அது செக்கிலிட்டு ஆடும் போது என்று சொல்கிறார். உண்மைதான். செக்கிலிடப்பட்டு ஆடும் எள்ளு ஒருவித இரைச்சலைக் கொடுக்கும்.

"மூடித் திறக்கின் முகம் காட்டுமாம்" பாம்பை மூடியுள்ள பெட்

-22-ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்திலிருந்து தமிழகம் வரை...

★ க. நடராசா
தலைவர்
பனம் பொருள்
அபிவிருத்திச்சபை

“உத்தமர்தாம் ஈயுமிடத்
தோங்குபனை போல்வரென
முத்தமிழ்த் தாய் சொன்ன முது
மொழிபோல் -இத்தரையில்
நல்ல பனைத்தொழில் நாட்டி
னில்ஓங்க அதில்
வல்லவர்கள் வாழ்க மகிழ்ந்து”

என்று திருமுருக கிருபானந்த வாரியார் கூறியுள்ளார். எமது நாட்டின் வடபிரதேசம் போன்று பாரத நாட்டில் தமிழக மும் பனைவளம்நிரம்பப்பெற்றது. தமிழகம் பனைவளத்தினைப் பெரும் பொருளாதார வளமாகக் கொண்டு விளங்குகின்றது. இவ் விடயத்தில் நாம் எத்துணை முயற்சிகளை மேற்கொண்டு வரு கின்ற போதிலும் இன்னும் பாரதத்தின் நிலைக்கு எமது பனை வளப் பொருளாதார மேம்பாட் டைப் பெறத் தவறியவர்களா கவே உள்ளோம்.

ஈழத்திலிருந்து தமிழகம் வரை பல்வேறு தொடர்புகள் பேசப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டு வருகின்ற போதிலும் கரிய நிறமும், உறுதியான உயர்ந்த உடலும், பசுமையான ஓலையையும் கொண்ட பனைமரம் இன்று இருநாட்டையும் இணைத்து நிற்கிறது. இதனாலேயே அரசாங்கமும் தமிழகப் பனை வளத்தை, அபிவிருத்தித் திட்டங்களை அறிந்து கொள்வதில் அதிக ஆர்வம் காட்டியது.

இங்கு பனை வளத் தொழிலேயே பிரதான வாழ்க்கைத்துறையாகக் கொண்டுள்ள மக்களின் மேம்பாட்டிற்கு என்னாலான பங்களிப்பைச் செலுத்துவதில் நான் முன்னிற்பவன். இதனாலேயே நான் தமிழகப் பயணம் மேற்கொள்ளுவதற்கு முடிவு செய்தேன்.

இலங்கை அரசின் அனுமதியுடன் தமிழ் நாட்டு அரசின் விருந்தினராகச் செல்லும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

எயர்லங்கா விமானம் என்னை அலுங்காமல் நலுங்காமல் தமிழகம் கொண்டு சென்று சேர்ப்பித்தது. வழக்கத்தில் ஒரு குறிப்பிட்ட தூரத்திற்குப் பிரயாணம் செய்வதற்கு மணித்தியாலக் கணக்கில் காத்து நின்று இடிபட்டும், நெருக்கியும் பெற்ற அனுபவங்கள் போலன்றி விமானப் பயணம் ஆறுதலைக் கொடுத்தது. காலை 8.30 மணிக்கு கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் விமானத்தில் ஏறினேன். காலை 9.45க்குச் சென்னை விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்து விட்டதாகவும், இன்னும் சில நிமிட நேரத்தில் தரையில் இறங்கப்போவதாகவும், பயணிகள் பெல்ட்டுக்களைப் பூட்டுமாறும் அறிவிப்பு வந்ததும், இயல்பாகவே ஏற்பட்ட பரபரப்புடன் விமானத்தின் யன்னலுக்கூடாக வெளியே பார்த்தபோது—அங்கே நின்ற பனை மரங்கள் குட்டை குட்டையாகக் கண்ணுக்குத் தெரிந்தன.

விமானத்தில் பயணம் செய்யும் ஒவ்வொருவருக்கும் தமக்குப் பிடித்தமான அல்லது தொடர்பான ஒன்றுதான் முதலில் கண்களுக்குத் தெரிந்திருக்கும்.

எனக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த ஒரு இளைஞர் தமது திருமணத்தை நடத்துவதற்காகத் தமிழகம் செல்கின்றவர். அவர் ஏதோ யோசனையில் ஆழ்ந்து போயிருந்தார். விமானம் இறங்கப் போவதாக விமானப் பணிப்பெண் விடுத்த அறிவிப்புக் கூட அவருக்குக் கேட்கவில்லை. நிச்சயமாக அந்த வாலிபர் தனது வருங்காலத் துணைவியின் ஞாபகத்தில் தான் தன்னை மறந்து போயிருப்பார் போலும்.

விமானம் தாழ்ந்து தாழ்ந்து தரையைத் தொடுவதற்கு வட்டமிட்டுக் கொண்டிருந்த போதிலும் விமானத்திலிருந்து பல திக்குகளிலும் பனை மரத்தையே தேடித் தேடிப் பார்த்தேன் தூரத்தில் ஓரிரு பனைகளை மட்டுமே காணக் கிடைத்தது.

அப்போது எனக்குக் "கற்பகமே; அற்புதமே! காதற் கரும்பனையே" என்று கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை அவர்கள் பாடியது ஞாபகத்திற்கு வந்தது.


(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி இல-10

## பரிசு ரூபா 50/-




இடமிருந்துவலம்:-

(1) ரயிலை இயக்கும் சக்திகளில் இதுவுமொன்று.

(2) அடவி என்பதை இப்படியும் அழைப்பர்.

(4) பண்டைக்கால இலக்கியங்களில் பேசப்பட்ட இக்குலம் இன்று மறைந்துவிட்டது.

(6) ஆடு, மாடு போன்றவற்றின் உணவு

(8) ஒரு மிருகம்

(9) இது மாணவர்கள் கல்வி பயிலுமிடம்.

மேலிருந்து கீழ்

(1) எமக்குத் தேவையான மின்சாரம் இதிலிருந்துதான் பெறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(2) கிரகங்களுட் பெரியது இது.

(3) இது ஆறு பருவகாலங்களில் ஒன்று.

(5) ஆற்றிலிருந்து கரையில் ஒதுக்கப்படும் ஒருவகை வளம் செறிந்தமண்.

(6) இதைக்கண்டால் படையும் நடுங்குமாம். (மாறி வந்துள்ளது)

(7) காப்பியங்களில் ஒன்முன இதன் பெயர் இக்கதாநாயகி யின் பெயரைக் கொண்டுள்ளது.

நிபந்தனைகள்

* விடைகள் தரப்பட்ட கூப்பன்களில் நிரப்பப்பட்டு ஆசிரியர். 'கற்பகம்', 330, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

* பரிசு பெற்றவர் விபரம் அடுத்தமாதக் 'கற்பகம்' இதழில் வெளிவரும்

* முதற்பரிசு ரூபா 25/-, 2 ம் பரிசு ரூபா 15/-, 3 ம் பரிசு 10/- பரிசுகள் யாவும் போட்டி முடிவுகள் வெளியானதும் அனுப்பி வைக்கப்படும். அரியாலை தெ. ப. பொ. கூட்டுறவுச்சங்க ஊழி யர்கள் இப்பரிசை வழங்குகின்றனர்.

* கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் குறுக்கெழுத்துப் போட்டி இல 10 எனக் குறிப்பிடல் வேண்டும்.

## முடிவு திகதி: 15-1-1986

பெயர் :- ..............................................................

விலாசம் :- ..............................................................

..............................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மாதம் 25ம் திகதி நத்தார் தினம். உலகத்தோரின் பாவங்களைத் தானே சுமந்து மன்னுயிர்களுக்காகத் தன்னுயிரை ஈந்து பாவிகளை இரட்சித்த இயேசுநாதர் அவதரித்த தினம். இத்தினத்தில் இயேசுகிறிஸ்துநாதர் அருளிய அறிவுக் கதைகளை 'கற்பகம்' கிறிஸ்மஸ் பரிசாக உங்களுக்குத் தருகின்றோம். இவ் அறிவுக் கதைகள் பைபிள் புதிய ஏற்பாட்டில் அர்ச். லூக்கா எழுதிய சுவிசேஷத்தில் உள்ளவை.

★ ஊதாரி மகன்

ஒருவனுக்கு இரு புதல்வர்கள் இருந்தனர். அவர்களில் இளையவன் தந்தையைப் பார்த்து, "தந்தையே, என் பங்குக்கு உரிய சொத்துக்களைப் பாகம் பிரித்துக் கொடுத்து விடுங்கள்" என்று கேட்டுக்கொண்டான். அவ்வண்ணமே தகப்பன் தனது சொத்துக்களைப் பகிர்ந்து கொடுத்து விட்டான். பல நாட்கள்சென்றபின் இளையமகன் தன் சொத்துக்களோடு தூரதேசம் சென்று ஊதாரித்தனமாக நடந்து எல்லாச் செல்வத்தையும் செலவழித்து இழந்து விட்டான்.

அந்த நாட்டில் பஞ்சமும் வந்து விட்டது. பிழைப்புக்கு என்ன செய்வது என்று தெரியாமல் அவன் தத்தளித்தான். கடைசியில் அந்த நாட்டுச்குடி மக்களில் ஒருவனிடம் போய் வேலைக்குச் சேர்ந்து கொண்டான் அவனை வேலைக்கு வைத்துக் கொண்ட குடியானவன் தனது வயல்களில் பன்றிகளை மேய்க்கும்படி கூறி அவனை அனுப்பினான். பன்றிகள் சாப்பிடும் தவிட்டைத் தின்று கூட வயிற்றை நிரப்ப அவன் ஆசைப்பட்டான். ஆனால் அவனுக்கு அந்தத் தவிட்டைக் கொடுப்பார் கூட எவருமில்லை.

> தன்னை
> உயர்த்திக்
> கொள்பவன்
> தாழ்த்தப்படுவான்.
> தன்னைத்
> தாழ்த்திக்
> கொள்பவன்
> உயர்த்தப்படுவான்.

# இயேசு சொன்ன கதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல நாட்களின் பின்னரே அவனுக்குப் புத்தி வந்தது. அவன் தனக்குள்தானே, என் தந்தையாரிடம் கூலி வேலை செய்பவர்களுக்குக் கூடப் போதிய உணவு இருக்கிறது. நானோ பசியினால் சாகிறேன். நான் என் தந்தையிடம் போய், "தந்தையே நான் பரலோகத்துக்கு விரோதமாகவும், தங்கள் முன்னிலையிலும் பாவம் செய்தேன். தங்களுடைய குமாரன் என்று சொல்லிக் கொள்ளவும் எனக்கு அருகதை இல்லை. என்னைத் தங்களுடைய கூலிக்காரர்களில் ஒருவனாகச் சேர்த்துக் கொள்ளுங்கள்'' என்று கேட்டுக்கொள்ளுவேன் என்று சொல்லிக்கொண்டான்.

தான் எண்ணியவாறே தந்தையிடம் சென்றான் அவன் தூரத்தில் வரும்போதே தந்தை அவனைப் பார்த்துவிட்டான். உடனே ஓடிப்போய் மகனைக் கட்டித் தழுவிமுத்தமிட்டான். அப்போது மகன், "தந்தையே நான் பரலோகத்துக்கு விரோதமாகவும், தங்கள் முன்னிலையிலும் பாவம் செய்தேன். தங்களுடைய குமாரன் என்று சொல்லிக் கொள்ளவும் எனக்கு அருகதை இல்லை'' என்று சொன்னான்.

தகப்பன் தனது வேலைக்காரர்களை அழைத்து "உயர்ந்த ஆடைகளைக் கொண்டு வந்து இவனுக்கு உடுத்துங்கள். கைக்கு மோதிரம் போட்டுக் கால்களில் பாதரட்சைகளை மாட்டுங்கள். நன்றாகக் கொழுத்த கன்றுக்குட்டியை வெட்டிக் கறி சமையுங்கள். நாம் சாப்பிட்டுச் சந்தோஷமாக இருப்போம். ஏனென்றால் என் குமாரன் செத்துப் பிழைத்திருக்கிறான், காணாமற்போய் இப்போது காணப்பட்டிருக்கிறான்,'' என்றான். அவ்வண்ணமே எல்லோரும் சந்தோஷமாக இருந்தனர்.

அதுவரையிலும் வயலில் இருந்த மூத்த புதல்வன் வீடு நோக்கிவந்து கொண்டிருந்தான். வரும்போதே இந்தச் சந்தோஷ ஆரவாரத்தைக் கண்டு கொண்டான். வேலைக்காரன் ஒருவனை அழைத்து என்ன விஷயமென்று விசாரித்தான். அவன் விஷயத்தைச் சொல்லவே மூத்த புதல்வனுக்குக் கோபம் வந்து விட்டது. வீட்டுக்குள் போகவே விரும்பவில்லை. இதனையறிந்த தந்தை அவனை உள்ளே வரும்படி அழைத்தார்.

மூத்தவன் தகப்பனைப்பார்த்து, "இத்தனைகாலமும் நான் உங்களுக்கு ஊழியம் செய்திருக்கிறேன். அப்படியிருந்தும் நான் என் நண்பர்களுடன் சந்தோஷமாக இருக்க ஓர் ஆட்டுக்குட்டியைக் கூடக் கொடுத்ததில்லை. ஆனால் உங்கள் ஆஸ்தியை எல்லாம் அழித்துவிட்டு வந்திருப்பவனுக்கு கொழுத்த கன்றை வெட்டி விருந்துவைக்கிறீர்களே'' என்றான் அதற்குத் தந்தை கூறியது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகனே நீ எப்போதும் என்னுடன் இருப்பவன். அதனுல் என்னுடைய ஆஸ்திஎல்லாம் உன்னுடைய ஆஸ்திதான். ஆனுல் உன் தம்பியோ செத்துப்பிழைத்திருக்கிருன். காணுமற் போய், திரும்பவும் காணப்பட்டிருக்கிருன். ஆகவே, நாம் சந்தோஷமாகவும், குதூகலமாகவும் இருப்பது தானே நியாயம்?"

## ★ யாருக்கு உயர் பதவி?

இரு நபர்கள் தேவாலயத்திற்குப் பிரார்த்தனை செய்யப் போனுர்கள். அவர்களில் ஒருவன் பரிசேயன் (சமய ஆசாரங்களைக் கடுமையாக அனுஷ்டிக்கும் யூதன்). மற்றவன் ஆயக்காரன் (வரி வசூல் செய்பவன்). பரிசேயன் பின்வருமாறு பிரார்த்தனை செய்தான்:- "ஆண்டவனே! நிர்ப்பந்தித்துப் பணம் பறிப்பவர்கள், அநியாயமாக நடப்பவர்கள், விபசாரம் புரிகிறவர்கள் ஆகியவர்களைப் போலவோ, இந்த ஆயக்காரனைப் போலவோ நான் இல்லை. அதற்காக உன்னைத் தோத்திரம் செய்கிறேன். என் சம்பாத்தியத்தில் நான் வாரத்திற்கு இருமுறை பட்டினி விரதமிருக்கிறேன். பத்தில் ஒரு பகுதியைத் தானம் செய்கிறேன்."

ஆயக்காரன் தன் மார்பில் அறைந்து கொண்டு, "ஆண்டவனே, பாவியாகிய என்மீது கருணை கொள்வாயாக" என்று பிரார்த்தித்தான்.

இந்த இருவரில் பரிசேயனைவிட ஆயக்காரன் நேர்மையுள்ளவனுக வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தான். ஏனென்றுல் தன்னை உயர்த்திக் கொள்பவன் தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்திக் கொள்பவன் உயர்த்தப்படுவான்

## உலக அதிசயத்தை சாயாமல் தடுக்கப் போராட்டம்

உலகின் ஏழு உலக அதிசயங்களில் ஒன்றுன சாய்ந்த பைசா கோபுரம் ஒரேயடியாகச் சாய்ந்து விடுமோ என்ற அச்சம் இப்போது ஏற்பட்டுள்ளது. பாரிஸில் உள்ள பைசா நகரில் சாய்ந்த கோபுரம் அமைந்துள்ளது. எட்டு மாடிகளைக் கொண்ட இக்கோபுரம் 1174ம் ஆண்டு கட்ட ஆரம்பிக்கப்பட்டது. வொனஸ்ஞே பினாஞே என்பவர் 'அப்ஸ கதீட்ர' லுக்கு மணிக்கூட்டுக்கோபுர மொன்றை கட்டத் தொடங்கிய போது மூன்றுவது மாடி பூர்த்தியானதும் கட்டடம் நிலத்தில் புதைந்து ஒரு பக்கம் சாய்வாக நின்றது. 99 வருடங்களின்பின் கட்டிடவேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு, பண்ணுெலி பரப்பும் ஏழு மணிகள் அமைக்கப்பட்டன.

இந்த பைசா கோபுரம் இப்போது சாய்ந்துகொண்டேசெல்கின்றதால் இதனை தடுப்பதற்காகப் பிரசித்தி பெற்ற பொறியியல் வல்லுனர்கள் பகீரத முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றனர். சிறு அதிர்வுகள்கூட இக் கோபுரத்தைப் பாதிக்கும்என்பதால் கோபுரச் சுற்றுடல் பகுதி அமைதிப் பிரதேசமாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஹோலில் ஒய்வாக அமர்ந்திருந்த தீபனிடம் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார் அந்தப் பெரியவர். "தீபன் உன் சின்னம்மா மது இங்கே வந்திருந்தா. நீ இல்லை. அதனுல் என்னேடு பேசிக் கொண்டிருந்துவிட்டுப் பாய்விட்டா."

"ஏன் ஏதாவது அவசர காரியமாகவா வந்தாங்க அப்பா" என்ருன் தீபன். அவர் சிரித்துவிட்டு 'ல்லை . ஆனுல் உன் கல்யாண விசயமாகத்தான் வந்திருந்தா. நீ சிக்கிரம் கல்யாணம் செய்ய வேண்டுமென்று விரும்புகிருு. நானும் அதையே விரும்புகிறேன்" என்ருர்.

அவன் குறும்பு தவள அவரைப் பார்த்து "சரிப்பா, ஆனுல் நான் யாரைக்கல்யாணம் பண்ணிக்கிட்டாலும் அவளால் என் காதலுக்குத் தடை இருக்கக்கூடாது" என்ருன். அவர் திடுக்குற்று நிமிர்ந்து, குரல் அதிர, "தீபன்" என்ருர். அவன் சிரித்துவிட்டு "அப்பா காதலிக்கிறது என்ருல் பெண்ணை மட்டும் தாஞு காத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்க முடியும். நான் 'காதலிக்கிறது மூன்று. ஒன்று உங்களுக்காக எனது தொழிலான வைத்தியத்தைக் காதலிக்கிறேன். இரண்டாவது என் அம்மாவுக்காக இசையைக் காதலிக்கிறேன். மூன்றாவது என் சின்னம்மாவுக்காக அவளைப் போலவே சமூக சேவையைக் காதலிக்கிறேன். எனக்கு வர்றவளால இந்த மூன்றுக்கும் தடை இல்லை என்றால் சரி அப்பா'' என்று விட்டு "நான் கொஞ்சம் வெளியே போய் வரேம்பா'' என்றவாறே வெளியேறினான். அவன் போனதும் மெதுவாகக் கண்களை மூடிக் கொண்டவரின் நினைவில் தீபா தோன்றி கடந்துபோன காலத்தை அசைபோட வைத்தாள். சந்துரு அப்போது டாக்ரர் மனோகரின் வீட்டிற்கு எதிர்வீட்டில் தனது தாயுடன் வாழ்ந்து கொண்டிருந்தான். சிறுவயதிலிருந்து விளையாட்டிற்கோ பேச்சிற்கோ ஒரே துணை டாக்ரர் மனோகரின் ஒரே மகள் தீபா தான். இருவரும் வாலிப வயதை அடைந்தபோது, தீபாவே தனது வாழ்க்கை முழுவதும் துணைவர வேண்டும் என்று ஏங்கியது சந்துருவின் உள்ளம். ஆனாலும் அதை எப்படி அவளிடம் சொல்வது? அவள் மறுத்து விட்டால்... என்ற பயத்தில் அமைதியாக இருந்தான்.

அன்று காலை சந்துரு தீபா வீட்டில் தீபாவின் தந்தையுடன் பேசிக் கொண்டிருந்த போது தீபாவும் மதுவும் கோவிலால் வந்தார்கள். அந்நேரம் பார்த்து மனோகருக்குஆஸ்பத்திரியிலிருந்து டெலிபோன் வர அவர் அவசரமாகப் புறப்பட்டார். அவர் போனதும் சந்துரு தீபாவுக்கும் மதுவுக்கும் அருகே வந்து,குறும்பாகப் புன்னகைத்த வண்ணம் "செவ்வாய்க்கிழமை காலை இவ்வளவு பயபக்தியா துர்க்கை அம்மன் கோவிலுக்குப் போயிட்டு வந்திருக்கிறீங்க. பொதுவா எல்லாரும் சொல்லுவாங்க உங்களைப்போல கன்னிப்பெண்கள் இப்படி பூஜையை மேற்கொண்டால் அதற்குக் காரணம் தாம் விரும்பும் கணவன் தமக்குக்கிடைக்க வேண்டும் என்பதனால் என்று, அப்படியானால் நீங்களும்......'' என்று கூறி அவன் குறும்பாகப் புன்னகைக்க மது சொன்னாள். "நான் அப்படித்தான் சந்துரு'' என்று. அவன் தீபாவின் மனதை எப்படியும் அறிந்து விடவேண்டும் என்ற துடிப்பில்"தீபா நீங்கள்,.'' என்றான். அவள் புன்னகைத்தவாறே ரேப்ரிகாடரை முடுக்கினாள் நெஞ்சை வருடித் தருகிற மாதிரி இனிய சுகத்துடன் ஒலித்தது அந்த இனிய கீதம்..."மாக் கோலம் போட்டு மாவிளக்கேற்றி நீ கிடைக்க வேண்டிக்கிட்டேன்''

எவ்வளவு எளிதாக தனது மனதை வெளிப்படுத்தி விட்டாள் அவள். பாடலின் மூலம் ஒருவரின் மனதை மற்றவர் புரிந்து கொண்ட பூரிப்பில் ஒருவரை ஒருவர் இமைக்காது பார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு நின்றார்கள். மது அங்கு நிற்கிறாள் என்ற நினைவு வர இருவரும் தம்மைச் சுதாக ரித்துக் கொண்டு மதுவைப் பார்த்த போது அவளின் கண்கள் கலங்கியிருந்தன.

தீபா மதுவின் கைகளைப்பிடித்து "ஏன்டி மது, என்னாச்சு; ஏன் அழுகிறாய்?" என்றாள். அதற்கு மது "ஒண்ணுமில்லேடி கண் ணில விரல் குத்திச்சு" என்றாள். "ரொம்ப வலிக்குதா மது காட்டு பார்ப்போம்" என்று அன்பாகக் கூறியவாறே தீபா மதுவின் கண் களை நோக்கிய போது மது சட் டெனத் தன்கையால் கண்களை மூடிக் கொண்டாள். தீபா உரி மையுடன் "சரியா வலிக்குது என் கிறாய். ஆனால் பார்க்கக்கூட விட மாட்டேங்கிறே. அப்போ என்ன செய்யப் போறாய்" என்றாள். "வலி தாங்க முடியலைத்தான் அதுக்காக நான் விரலை வெட்டி எறிஞ்சிட மாட்டேன் தீபா" என்று கூறிய மது விடுவிடென நடந்து சென்று விட்டாள். அடுத்து வந்த ஒருவாரத்திற்குள் சந்துருவின் தாய், அவனுக்கு உறவு என்று சொல்ல இருந்த ஒரே உயிர் தன்னை உருக்கி அவனை வளர்த்த தெய்வம், தற்செயலாக கிணற்றில் விழுந்து உயிரைப் போக்கிக் கொண்டது. அதனால் அவன் இந்த ஒருமாதகாலமாகத் தீபாவுடன் அமைதியாகப் பேச வில்லை. பேச முயன்ற போதெல் லாம் அவனை மீறி அழுகைதான் வந்தது. ஓடாகத் தேய்ந்து மகனை ஆளாக்கி மறைந்து போய்விட்ட அந்தத் தாயின் மறைவு அவனை அவ்வளவு தூரம் பாதித்திருந்

சிலேடை...

— 22ம் பக்கம் பார்க்க

டியைத் திறந்தால் உடனே அது தனது முகத்தைத் தான் காட் டும் குடத்திலுள்ள எண்ணெ யைப் பார்க்க விரும்பினால் அதன் மூடியைத் திறந்தால் எமது முகம் எண்ணெயுள் தெரியும். "ஓடி மண்டைபற்றில் பரபரெனும்" என்றால் மனிதனுடைய உடலிலே பாம்பு தீண்டினால் இரத்தத்துள் ஓடி மண்டைக்குள் புகுந்து ஒரு வித உணர்ச்சியை உண்டாக்கும். எண்ணெயைத் தலையில் ஊற்றித் தேய்த்தால்குளிர்ச்சியைத் தோற் றுவித்துச் சூட்டைக் குறைத்து ஒருவித உணர்ச்சியை உண்டாக் கும். "பிர" நாக்கு உண்டென் கிறார் புலவர். பாம்புக்குப் பிளவு பட்ட நாக்கு உண்டு. எண்ணெய் எடுக்கப்பட்டதும் எள்ளில் மீதி யாகவுள்ள சக்கை பிண்ணாக்கு எனப்படுகிறது.

இத்தகைய பல சிலேடைப் பாடல்கள் அவரால் பாடப்பட் டுள்ளன. இப்பாடல்கள் படிப் போருக்குப் பெருவிளக்கத்தை யும், அறிவையும் வழங்குவது மாத்திரமன்றிக் காளமேகப் புல வரின் நுண்ணிய அறிவையும், அந்த அறிவு அவரிடத்தில் பரந்து இருந்ததையும் காட்டு கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. இந்தச் சூழலில் இருந்து சிறிது காலம் விலகியிருந்தால் நிம்மதிபோல் தோன்றியது.

ஒரு மாதத்தின் பின் இன்று தான் சந்துரு தீபாவுடன் பேசுகிறான்."தீபா நான் அடுத்தவாரம் எனது இசைக்குழுவுடன் சிங்கப்பூருக்குப் போகிறேன்,சிங்கப்பூரில் இருந்து வேறு சில இடங்களுக்கும் போக வேண்டியிருக்கிறது. அத்துடன் என்னால் இங்கு இருக்க முடியவில்லை. குழந்தையில் இருந்து அம்மாவுடன் நான் உலவிய ஒவ்வொரு இடங்களாகப் பார்க்கும்போது கட்டுப்படுத்த முடியாமல்அழுகின்றேன் இரண்டு வருடங்களின் பின்தான் நான் மீண்டும் வருவேன் என்று நினைக்கிறேன். ஏதோ அது என்னுடைய அந்தந்த நேர மனநிலையை பொறுத்தது. ஆனால் வந்ததும் உங்க பெற்றோரின் சம்மதத்துடன் உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்'' என்றான். தீபாவும் சம்மதம் கொடுக்க அவன் விடை பெற்றான்.

காலத்தின் சுழற்சியில் இருவருடங்கள் வேகமாக மறைய, சந்துரு திரும்பி வந்தான். வரும் போதே எதிர்வீட்டு அமளியை அவதானித்தான். மனேகர் ஒரு டாக்ரர் என்பதை விட புகழ் பெற்ற தீப்பெட்டித் தொழிற்சாலை அதிபர் என்பதால் எல்லோருக்கும் பிரபலமாகியிருந்தார். அங்குசிறு விசேஷமானாலும் பெரு விழாவாகத்தான் நடக்கும். அப்படி ஏதோ தான் என்று நினைத்த வண்ணம் பூட்டிக்கிடந்த வீட்டைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தான். எதிர் கொண்டழைப்பதற்குக்கூட யாரும் இல்லை என்று ஏங்கிய மனத்திற்கு, கெதியில் தீபாவை மனைவி ஆக்கிவிட்டால் அந்தக்குறை தீரும் என்று சமாதானம் சொன்னவாறே படுக்கையில் சாய்ந்தான். அப்போது எதிர்வீட்டுப் பையன் ஜனந்தன் வந்து"அடுத்த வாரம் தீபா அக்காக்குக் கல்யாணம்'' என்று கூறிவிட்டு ஓடினான்.

ஜனந்தன் கூறிய அந்தச் செய்தி சந்துருவின் தலையையே வெடிக்க வைத்தது. இது எப்படிச் சாத்தியம்? இதுக்குத் தீபா கூடச் சம்மதமா? சிறுவயதில் இருந்தே அவனுடைய கனவுகளில் நினைவுகளில் அவனுடையவள் என்றிருந்ததீபா அவனுக்குச் சொந்தம் இல்லையா? அவனால் அதற்குமேல் சிந்திக்க முடியவில்லை.

அடுத்த நாள் அவன் கோவில் வீதியால் சென்று கொண்டிருந்த போது, எதிரே வந்த மது "எப்ப வந்தீங்க சந்துரு'' என்றாள். "நேற்றுத்தான்.'' சுவாரஸ்யமற்றுப் பதிலளித்தான் சந்துரு. "சந்துரு தீபாவுக்கு...'' என்று மது ஆரம்பித்த போது "கேள்விப்பட்டேன் மது. தீபா இப்படி ஒரு ஏமாற்றுக்காரி என்று கனவிலும் நினைக்கவில்லை'' என்றான் முகத்தில் கோபம் மின்ன. மது அமைதியாக மறுத்தாள் "சந்துரு தீபாவை அப்படி நினைக்காதீங்க; இந்தக்கல்யாணம் தீபாவின் மன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொத்த சம்மதத்துடன் நடக்கல்ல. அவளுக்குக் கணவனுய் வரப்போகும் ஜெகனின் அப்பாவும் தீபாவின் அப்பாவும் தொழிலில் பங்காளிகள், தங்கள் பிள்ளைகளை வாழ்க்கையிலும் பங்காளிகள்ஆக்கவிரும்பினுர்கள். இதைத் தீபாவின் அப்பா தீபாவிடம் சொன்னபோது அவள் சம்மதிக்கவே இல்லே, உங்களுக்கும் தனக்கும் இடையிலான உறவைக்கூறிக் கதறினுள். ஆனல் அவளுடைய அப்பா அதை எல்லாம் காதில வாங்கிக்கல்ல. 'தீபா, நீ நான் கிழிச்சகோட்டைத் தாண்டமாட்டாய் என்ற நம்பிக்கையில் நான் வாக்குக் கொடுத்திட்டேன். இந்தக் கல்யாணம நடக்காவிட்டால் நான் ஊரில் தலே நிமிர்ந்து நடக்க முடியாது' என்று ஒரே பதிலாகக் கூறிவிட்டார். தன்னுடைய சந்தோஷத்திற்காக பெற்ருேருக்குத் தலேகுனிவை ஏற்படுத்தக் கூடாது என்ற எண்ணத்தில தான் தீபா இதற்குச் சம்மதித்தாள்'' என்று மது நடந்தவற்றைக் கூறியதும், பொங்கிவந்த கண்ணீரைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டாள் சந்துரு.

தீபாவின் கல்யாணத்துக்குப் பின் இரண்டு வாரங்களே அங்கே கடத்திய சந்துரு, தொடர்ந்தும் அதே ஊரிலிருக்கப் பிடிக்காமல் வீட்டை விற்றுவிட்டு அங்கிருந்து வெளியேறிஞன். போகும் போது கண்கள் தாமாகவே தீபாவின் வீட்டை நோக்கித் திரும்ப அங்கே தீபா கண்களில் நீர்வழிய ஆடாது அசையாது நின்றிருந்தாள்.

அவன் போனபின் தீபாவின் வாழ்வில் எத்தனே மாற்றங்கள், ஏமாற்றங்கள், பேரிடிகள், சந்துரு அந்த ஊரில் இருந்து போய் பதினைராவது மாதம் பூட்டியிருந்த தீபாவின் வீட்டுக்கதவை மெதுவாகத் தட்டினுன். கதவு திறபட அவனெதிரே தீபா முடிச்சிட்ட கூந்தலும், பொட்டிழந்த நெற்றியுமாக, உடலை வெள்ளை நிறப்புடவை தழுவியிருக்க, வெள்ளைப்புருவாக, சிலேபோல் நின்று கொண்டிருந்தாள். ஹோலில் நான்கு சட்டங்களுக்குள் அடங்கிவிட்ட ஜெகன் வசீகரமாகப் புன்னகைத்தவாறே வரவேற்ருன்.

''நான் இங்கிருந்துபோன இரண்டு மாசத்திலேயே மலேஷியாவுக்குப் போனேன். திரும்பி இங்கே வந்ததுக்கப்புறம்தான் எல்லாத்தையுமே அறிந்தேன். உங்களைத்தேற்றிக்க என்ருலேமுடியாதுதான். இருந்தாலும் ஆற்றிக்கிறமாதிரி ரெண்டு வார்த்தை பேசலாம் என்று நினேக்கிறேன்'' என்ருன். அவள் புன்னகைத்தவாறே தலேயாட்டிஞள்.

தீபா முதல்ல உங்களுக்குக் கல்யாணம் என்றதும் தாங்க முடியல்லே. ஆனல் அப்புறம் மனசார உங்களை வாழ்த்தினேன். ஆனல், எல்லாத்துக்கும் மேலால விதி உங்க வாழ்க்கையை இப்படி மாற்றிவிட்டுது. தீபா நிலேமையை நான் எனக்குச் சாதக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாய் பயன்படுத்தறேன் என்று நீங்க நினைக்கமாட்டீங்க என்ற நம்பிக்கையில் சொல்லுறேன். உங்களை இரண்டாம் கல்யாணம் செய்யச்சொல்லிப் பலரும் கூறிய போது 'எனக்குவர்ற புருஷன் எனக்கு நல்ல கணவனுய் இருக்க லாம். ஆனுல் பிறக்கப்போற என் குழந்தைக்கு நல்ல தகப்பனுய் இருக்க முடியாது' ன்னு கூறீட்டீங்களாம். நான் உங்களுக்கு நல்ல புருஷனுய் இருக்கிறதை விட, இப்ப உங்க வயித்தில வள ரும் குழந்தைக்கு நல்ல தகப்ப னுய் இருக்க முடியும் என்கிற நம் பிக்கை எனக்கிருக்கு'' என்று ஒரே மூச்சில் பேசி முடித்தான் சந்துரு.

தீபா மீண்டும் அவனைப் பார்த் துப் புன்னகைத்துவிட்டு, ''சந் துரு, தீபா என்கிற இந்த மலர் ஒருமரத்தில ஒரு தடவைமலர்ந்து விட்டது. இது இனி இன்னெரு இடத்தில் மலர முடியாது. மலர வும் கூடாது. எனக்குத் தெரியும் நீங்க என் குழந்தைக்கு நல்ல தகப்பனுய் இருப்பீங்கன்னு. அதேபோல் ஒருவேளை நான் இல் லாமல் போயிட்டா மது என் குழந்தைக்கு நல்ல தாயாகவும் இருப்பா'' என்ருள். சந்துருதிகைத் துப்போய் ''தீபா'' என்ருன்

தீபா மேலும் தொடர்ந்தாள். ''சந்துரு நான்ரொம்பவும்அதிர்ஷ் டம் கெட்டவள். காதலித்தவ னைக் கைப்பிடிப்பதற்கு கொடுத்து வைக்கல்ல. கட்டின கணவன், ஒரு குழந்தையைப் போல் பாதுகாத்த கணவனின் உறவு மூன்று மாதத்துக்கு மேல் தொடர்றதுக்குக் கொடுத்து வைக்கல்ல. பிறக்கப்போற குழந் தையை நான் வளர்ப்பேன் என் கிற நம்பிக்கையும் எனக்கில்லை. கனவில் எல்லாம் என் கணவர் 'நீ இல்லாமல் என்னுலை இருக்க முடியவில்லை. தீபா கெதியில் என்கிட்ட வந்திடு' என்று சொல்லுற மாதிரி இருக்குது.

நான் செத்தாலும் நீங்க மது வைக் கல்யாணம் பண்ணிக்க ணும்.'என் இதயத்தில்தீபா ஒருத் திக்குத்தான் இடம்' என்று கூறி மறுத்திடாதீங்க'' என்ருள். ஆனுல் அவன் மறுத்தான். நீண்ட வாக்குவாதத்தின் பின் ''இதற்கு மது சம்மதிக்கணுமே'' என்ருன் சந்துரு. அதற்குத் தீபா ''மது உங் களை விரும்பினுள். ஆனுல் எங்க ளிருவரின் மனதையும் அறிந்த தும் விலகிவிட்டாள் ஆனுல் உங் களை நினைத்த மனதில் வேறு யாருக்குமிடமில்லை என வாழ்ந்து கொண்டிருக்கிருள். இந்த விஷ யம் எனக்கு மிக அண்மையில் தான் தெரியவந்திச்சு'' என்ருள்.

அந்தக்கிழமை சந்துரு தீபாவின் வீட்டிலேயே தங்கினுன். அந்த நாட்களில் ஒருநாள் சந்துரு, தீபா, மது மூவரும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது, மது சொன்னுள், ''தீபா நாங்க விரும் பின வாழ்க்கை எங்கள் மூவரில் யாருக்குமே கிடைக்கவில்லை ஆனுல் சந்துருவைப் பற்றிய நினை வுகள் எனக்குச் சொந்தம். உன் னைப்பற்றிய நினைவுகள் சந்துருவு குச் சொந்தம். உன் நினைவுக என்றும் உனது கணவனுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தம். இதுபோதும் எங்களுக்கு. ஏன்ஞ நாங்க மூன்று பேரும் வாழ்ந்து பழக்கப்பட்ட உறவு தானே 'நிழல் உறவு'. ஆனல் தீபா நீ இருந்து வளர்த்தாலும் என்றைக்குமே கல்யாணமின்றி ஒரு குழந்தையுமின்றி வாழப் போற எனக்கு உனக்குப் பிறக்கப் போகும் குழந்தைதான் பிள்ளை.''

ஒரு குழந்தைக்கு தீபா தாயாஞன். பிரசவ அறையில் இருந்து கொண்டுவரப்பட்ட தீபாவின் அருகே, இந்த உலகிற்கு வரும் போதே தாய் விரும்பியது போல் தந்தையையும் தாயையும் இணைத்துவிட்டு வந்த குழந்தை ஜெகதீபனை கைகளில் ஏந்திய வண்ணம், 'தூய்மையான அன்பிலிருந்து தான் சிறந்த தியாகங்கள் பிறக்கின்றன' என்பதற்குச் சான்ருக சந்துரு சிலையென நின்றிருந்தான்.

[யாவும் கற்பனை]

## நகரும் கண்டங்கள்...

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இப்பூமியின் அரைவாசிப் பகுதி என்ருவது ஒரு காலத்தில் இல்லாமலே போய்விடுமாம்.

பூமியிலுள்ள கண்டங்கள் நகர்ந்து கொண்டிருப்பதாக நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். ஒரு சூடான தட்டில் ஒரு துண்டு வெண்ணெயை வைக்கும் போது அது எவ்வாறு உருகி எல்லாப் பக்கமும் நகருமோ அது போல முன்பு ஒன்ருக இணைந்திருந்த கண்டங்கள் இன்று பிரிந்து விலகிச் சென்றுள்ளன.

அத்திலாந்திக் சமுத்திரத்தரை வருடத்திற்கு ஒரு அங்குலம் என்ற வீதத்தில் விரிவடைந்து வருகின்றது.

வாடிக்கையாளர்களுக்கு
எமது நத்தார் வாழ்த்துக்கள்!

உங்கள் மகிழ்ச்சியான குடும்பம்
குதூகலமான படங்களில்

O அடையாள அட்டை, பாஸ்போட் படங்கள்
O கலர், கறுப்பு – வெள்ளைப் படங்கள், பிறின்ரிங்
O வீடியோ ஒளிப்பதிவு
O படம் பிறேமிடுதல், விளம்பரப் பலகை எழுதுதல்

எங்கள் சேவை உங்களுக்காக

ராஜன் போட்டோ ரெக்னிக்கல் சென்ரர்
6, மவுண் கார்மேல் வீதி,
குருநகர், — யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பகம்
# அறிவுப் போட்டி இல-01

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த 'கற்பகம்' அறிவுப் போட்டி உங்களுக்குப் பெறுமதி மிக்க பரிசுகளை ஈட்டித்தரப் போகின்றது. பாடசாலை மாணவ மாணவிகளுக்கு இப் போட்டி பெரிதும் பயன் அளிக்கும். எங்கே உங்கள் மூளைக்கு வேலை கொடுங்கள் பார்க்கலாம்!

இங்கே தரப்பட்டுள்ள ஆறு வினாக்களுக்கும் சரியான விடைகளை எழுதி ஆசிரியர், 'கற்பகம்' 330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். முடிவு திகதி: 25. 1. 86

நிபந்தனைகள்:

- விடைகளுடன் கீழ்க் காணப்படும் கூப்பனும் பூர்த்தி செய்யப்பட்டு இணைத்து அனுப்ப வேண்டும்.
- ஒருவர் எத்தனை விடைகளும் அனுப்பலாம்.
- வடமாகாண தெ. ப. பொ. கூ. ச. சமாஜ ஊழியர்களும், இயக்குனர் சபை உறுப்பினர்களும் இப் போட்டியில் பங்குபற்ற முடியாது.
- மத்தியஸ்தர்களின் தீர்ப்பே இறுதியானது.

## வினாக்கள்

1) மனித குலத்தில் சாதி இரண்டு. அது ஆண்சாதி. பெண்சாதி. அதுபோல் பனையும் ஆண் பனை, பெண் பனை என்று இரு சதிகளைக் கொண்டுள்ளது உங்களுக்குத் தெரியும். இதே போன்று ஆண், பெண் இனத்தைக் கொண்ட வேறு இருமரங்களின் பெயர்கள் தருக?

2) பெண் பாளையில் தோன்றும் காய்க்கு என்ன பெயர்?

3) பனை மரத்தின் பெருமையை விளக்கும் காவியம் எது?

4) காகிதம் இல்லாத காலத்தில் எழுதவும், இலக்கியங்கள் படைக்கவும் ஏடாகப் பயன்படுத்தப்பட்டது எது?

5) "இல் வாழ்வுக்காகிய எல்லாப் பொருளையும்
எங்களுக் கெப்பொழுதுங் கொடுக்க
வல்ல பனை யெங்கள் செந்தமிழ் நாட்டிலே
வாழிய வாழிய ஞானப் பெண்ணே."

— 35ம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ★ கே. வி. என்.

இவைகளெல்லாமே என்னை உரமிட்டு வளர்த்ததென்றாலும், பின்பு அமெரிக்கன் தந்த அந்தப் பால்மாவும்கூட என்னை வளர்த்துத்தானிருக்கின்றதென்பதைச் சொல்லாமல் விட்டால் அது நன்றி கொன்றதன்மையாகாதா? இதைச் சொல்வதில் என்னவெட்கம் கெட்டுப் போய்விட்டது? இன்று பெரிய பொலீஸ் அதிகாரியாக ஆகியிருப்பதால் அப்படியே பிறந்தேன் என்றோ, அல்லது பாணுக்குமேல் வெண்ணை தடவிச் சாப்பிட்டுத்தான் வளர்ந்தேன் என்றோ சொல்லவில்லை என்பதற்காக யாரும் என்னை மதிக்காமல் கேவலமாக நினைத்துப் போனால் போகட்டுமே.

நான் அப்படித்தான் வளர்ந்தேன் என்பது இந்த முருகேசு வாத்தியாருக்குக் கூடத்தெரியும் அதனால் தானே அந்தப் பனங்காட்டு நரி இந்த நிலைக்கு வந்து விட்டதே என்ற ஆச்சரியமும் அதிசயமும் தோன்ற என்னை முழுசி முழுசிப் பார்த்தாரோ முதலில் என்றுகூட நான் நினைக்கிறேன். அந்தப் பனங்காட்டு நரி பண்பில்லாமலும் நடந்து பழி தீர்த்துக் கொள்ளும் என்றும் அவர் நினைக்கின்றார் போலும்.

பாவம்தான் முருகேசு வாத்தியார்.

அப்போது நான் எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தேன். எட்டாம் வகுப்பில் தான் படித்துக் கொண்டிருந்தேன் என்றாலும், அப்போதே எட்டித் தொடவேண்டிய உயரமும், கட்டிப் பிடித்தாலும் கைகளுக்குள்

# உண்மை

அடங்காத உடல் கட்டும் பெற்று வஞ்சகமில்லாமல் வளர்ந்து நிற்கும் பனையாக நின்றேன் என்றால்-

-பனையன் சின்னராசா என்ற பட்டப் பெயரே சூட்டி அழைக்கப்பட்டேன் என்றால்-

பழைய காலத்து ராசாக்களுக்கும் இராசகுமாரர்களுக்கும் மாத்திரமே அமையப்பெற வேண்டிய என் ஆஜானுபாகுவான தோற்றமும் நீட்டு நீட்டுக் கைகால்களும் நான் இந்த நாட்டிற்கு ராசாவாக வருவதற்குரிய காலங்கள் போய் விட்டதால்: பள்ளிக்கூட ஓட்டப் பந்தயம் உயரம் பாய்தல் ஆகிய சகல விளையாட்டுத் துறைகளிலும் நான் ஒரு சின்ன ராசாவேதான்.

'ஒட்டகச் சிவிங்கியின் ஓட்டத்துக்கு முன்னே எங்கையடா நாங்கள் ஓடி வெல்லப் போறம்? அதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடக்காதடா' என்று மற்றப் பையன்களின் பொறாமைக்கு இலக்காகியவன் தான் நான்.

ஆனாலும் எனது உடலும், உயரமும் செழித்து, வளர்ந்து இருந்த அளவிற்கு என் உள்ளம் வளர்ச்சி பெற்றிருந்ததா என்றால் ஒரேயடியாக இல்லையென்று சொல்லித் தான் ஆகவேண்டும். அது மிகவும் நெற்பங் கெட்டதனமான சனியனாகவே மற்ற வளர்ச்சிகளுக்கு ஈடுசோடாக வளர்ந்து இல்லாமல் குழந்தைப்பிள்ளைத் தனமான

# சுடும்

ஒன்றாகவே இருந்தது என்றால் அதையிட்டு நான் அன்று மிகமிக வெட்கமும் வேதனைகளும் பட்ட நாட்கள் எவ்வளவோ.

வஞ்சகம் சூதுவாதில்லாத உள்ளத்தின் தன்மையாலோ என்னவோ நான் அப்படி ஓங்கி வளர்ந்து நின்றேன் போலும்.

வயதில் பதினான்கு வருஷங்கள் ஆகி இருந்தபோதிலும் இன்றைய எட்டுப்பத்து வயதுச் சிறுவனின் உள்ளப் பாங்கான வளர்ச்சி தானும் அன்று நான் அந்த எருமை மாட்டு வயதிலும் பெற்றிருக்கவில்லை என்பது ஒரு வெட்கக்கேடான சங்கதி தானே! இந்த வகையில் என்னைக் காட்டிலும் என் வகுப்பிற் படித்துக் கொண்டிருந்த சில குண்டுக்குண்டு பயலுகளெல்லாம் குறிப்பாக செல்லத் துரையும், ஆறுமுகமும் என்னை குட்டிக் குட்டி பல உலக விஷயங்களைச் சொல்லித் தருவதிலிருந்து அவர்கள் எனக்குமேல் ஒருபடி வளர்ந்து விட்டிருந்ததுடன், என் குருவானவர்களாகவும் ஆகிவிட்டார்கள்.

என்ன வளர்ந்து, என்ன பெருத்து என்ன பிரயோசனம்? குருத்தடைத்த வாழையாக வளர்ந்து பெருத்திருப்பதால் யாருக்குத்தான் என்ன பிரயோசனம்?

'முருக்குப் பெருத்தும் தூணுக்குதவாத' கதையின் நினைவால் அன்று வெகுவாகக் கவலையுற்றேன்.

அதனால் எனக்கு என்மேலேயே ஒருவித வெறுப்பும், வேதனையும் உண்டாயிற்று.

மகன் தறுதலையாகிவிடக் கூடாதென்பதற்காக, வெறும் கட்டுப் பெட்டியாக வளர்த்துவிட்ட அப்பரின் மேலும், ஆச்சியின் மேலும் கூட அடங்காத கோபமே சில வேளைகளில் வந்தது. அவர்கள் பாவங்கள். எல்லாம் வறுமையின்

தொடர்கதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுமைதான் என்னை இப்படி அவர்கள் 'கூட்டம் கொம்பனியில்' சேரவிடாமலும், கூத்துத் திருவிழாவென்ற கோலாகலங்களைப் பார்க்க விடாமலும் தனியுண்டு தன்பாடுண்டு என்று வளர்ந்த,வளர்க்கப்பட்ட எனக்கு ஏன் திடீரென்று இந்த மனோ விகாரங்களும், ஏக்கங்களும் பற்றி கொண்டனவோ?

சித்தார்த்தன் அரண்மனையை விட்டு வெளியுலகில் நடமாடத் தொடங்கியதால் அன்றோ உலகத்தின் ஆசாபாசங்களையும், இன்பதுன்பங்களையும் முற்றுகக் கண்டறியக் கூடியதாக இருந்தது.

நாய்கள் இழுபடும். எந்த உணர்ச்சிகளுமின்றி வெறுமனே வேடிக்கை பார்ப்பேன். அப்பர் பிடரியில் ஒன்று தந்து 'போடா போய் உன்ரை வேலையைப்பார்' என்பார்.

'ஏன் அப்படி?' என்று அப்பரையே மிக அப்பாவித்தனமாகக் கேட்பேன்.

என் உள்ள வளர்ச்சிதான் அவருக்குத் தெரியுமே. அதனுல் அவரும் அதைச் சீரியஸாக எடுத்துக் கொள்ளாமல் "சில வேளைகளில் அவைகள் அப்படித்தான் ஒட்டுப் பட்டுக் கொள்ளும்" என்பார்.

'ஐயோ பாவங்கள்' என்னும் பரிதாப உணர்வே என்னுள் அவைகளுக்காக மேலோங்கும்.

பாம்புப்பிணையலை கண்டிருக்கின்றேன். ஏன் அப்படி என்று கேட்டால் அவைகளும் அப்படித்தான் என்பதோடு அவைகளை அப்படிப் பார்த்து நிற்கவே அவைகள் பறந்து வந்து கொத்திக் குதறிக் கொன்று விடுங்கள் என்றொரு படு பயங்கரக் கதையையும் சேர்த்துச் சொல்வார்கள். பின்பு அப்படிப் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருந்தேன் என்றாலும், மறுமுறை நின்று திரும்பிப் பார்க்காமலே தலை தெறிக்க ஓட்டம் பிடித்திருக்கிறேன்.

அப்படியெல்லாம் அன்று நான் மன வளர்ச்சி பெறுமல் வளர்ந்த, வளர்க்கப்பட்ட காலங்கள்.

படிப்பு நேரத்தில் படிப்பு. தோட்டம் துரவு வயல் வேலை நேரங்களில் மூச்சு விட முடியாத வேலைப்பழு. என்று சூத்திரக் கிணற்று மாடாட்டம் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்த எனக்கு இவைகளைப் பற்றி அறிய- ஆராய அல்லது உடனுக்குடன் உண்மையான பதில்களைச் சொல்லத்தான் யார் இருக்கிறுர்கள்? ஆனாலும் என் தரவளிப் பெடியளோடை சில வேளைகளில் அவர்கள் எல்லாந் தெரிந்து கொண்டு உடற்கூறுகளையும், உணர்வுகளையும் அவர்கள் சுவைக்கேற்ப ஆராயும் போது, நானும் கண்டதைச் சொல்லிச் சேர்ந்து சிரிப்பதல்ல; 'அப்படியென்றுல் அது என்னடா' என்று கேட்பேன்.

"அதுவா?... இதுகூட உனக்கு என்னும் தெரியாதே? கோதாரிப் போவானே! பனைமாதிரி வளர்ந்து நிக்கிறியே உன்னைக் கண்டு ஆரும் சிரிக்கவல்லோ போறுங்கள்' என்று கூறி என் வெங்காயத் தனத்தைப் பற்றி தங்களுக்குள் என்னென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னவோ எல்லாம் 'லோட்டி கட்டி' சிரித்துக் கதைப்பார்கள். இன்னும் படுபச்சைத் தனமான தூஷணை வார்த்தைகளினுலெல்லாம் என்னைத் திட்டித் திட்டிக் குளிப்பாட்டி வைப்பார்கள்.

அன்று ஒருநாள் எங்கள் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் இப்படித்தான் அந்த நிகழ்ச்சி நடந்தது;

பாடசாலையில் மூன்றேமூன்று ஆசிரியர்கள்தான் மொத்தம் உள்ளவர்கள். ஹெற்மாஸ்ரர் யோகநாதன் ஒன்று. பொக்கர் கணபதிப்பிள்ளை வாத்தியார், மற்றது பவளக்கொடி ரீச்சர். ஹெற்மாஸ்ரர் யோகநாதன் வித்துவான், பண்டிதர், சைவப்புலவர் பட்டங்களுடன் பிரம்மச்சரியத்தைக் கைக்கொண்டிருந்தார், என்பதற்கு நேர் எதிர்மாருக எனது வகுப்பு சக மாணவர்களாகிய செல்லத்துரையும், ஆறுமுகமும் மற்றவர்களும் என்னென்னவோ எல்லாம் உளறி தங்களுக்குள் கதைத்து வியாக்கியானம் செய்து கொள்வார்கள். இது என் செவிகளிலும் விழும்.

"சே! அப்படியெல்லாம் இல்லாதது பொல்லாததை கதைத்தால் பாவமடா" என்பேன்.

"போடா பனையா, உனக்கென்ன இழவா தெரியும். உந்த அசைவப் புலவர்களையா எங்களுக்கு நீ அவிட்டு விடுகிருய்? உன்ரை பாட்டிலே பேசாமல் இரடா" என்பார்கள்.

(தொடரும்)


## புதிய வரவு - செலவுத் திட்டத்தில் பனை அபிவிருத்தி

கடந்த 13.11.85 ம் திகதி நிதியமைச்சர் திரு. ரொனி டீ மெல் தமது வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பித்தார். அவரது வரவு செலவுத்திட்ட உரையிலிருந்து ஒரு பகுதி;—

"........முல்லைத்தீவுக்கான திட்டம் நீர்ப்பாய்ச்சல், பயிர்ச்செய்கை மீன்பிடி, இராமிய மின்மயமாக்கல்,கிராமிய வீதிகள், குடிநீர் வழங்கல், பனை அபிவிருத்தி, காணி, குடியேற்றத் திட்டங்கள் ஆகியவற்றில் கருத்துக் குவிந்து உள்ளது. அரசாங்கம் பல கோடி ரூபாவை ஒதுக்கியுள்ள இத்திட்டங்களின் செயற்பாடு இப்போது வடக்கிலும், கிழக்கிலும் உள்ள வன்முறைகளினுல் இடையீடு பட்டுள்ளது.........."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பாக பெத்லகேம் என்னும் சிற்றூரிலே. மாட்டுத்தொழுவத்திலே பாலகன் யேசு மனுக்குலத்தை மீட்பதற்காக மரியாயின் மடியில் அவதரித்தார். இச்சம்பவத்தை நினைவுகூரும் பொருட்டே வருடாவருடம் மார்கழித்திங்கள் 25ந் திகதி, கிறிஸ்மஸ் விழா, ஒளிவிழா, பாலன்பிறப்புவிழா, நத்தார்த் திருவிழா எனப் பலபெயர்களால் பாரெங்கும் விழாக் கொண்டாடப்படுகிறது.

இறைவனால் படைக்கப்பட்ட எம் ஆதிப் பெற்றோர் ஆதாம் ஏவாளின் பாவத்தின் விளைவாக மனுக்குலம் இறைவனிடமிருந்து விலகிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ள நேரிட்டது. ஆயினும், இறைவன் மனுக்குலத்தைப் பாவத்தின் கொடூரத்திலிருந்து மீட்பதற்காகவே தான் வாக்களித்தபடி, தமது திருக்குமாரனை உலகுக்கு அனுப்பினார். இறைவனின் திருக்குமாரன் உலகிற்கு அனுப்பிவைக்கப்படுவதற்கு இஸ்ராயேல் மக்களிடமிருந்து, யூதா கோத்திரம் தெரிந்தெடுக்கப்பட்டது. தெரிந்தெடுக்கப்பட்ட கன்னிகை ஒருத்தியிடம் இறைவனின் ஆவி நிழலிடுவதன் மூலம், இறைவனின் ஏக குமாரனாகிய யேசு கருத்தரித்து, இறைவனின் திருச்சித்தத்தை நிறைவேற்றினார். பாவத் தளையிலிருந்தும் அடிமைத்தனத்திலிருந்தும் மனிதனை மீட்கவே, மனுவுருவெடுத்தார் இறைமகனார்.

# கிறிஸ்து விழாவைக் கொண்டாட உரித்துடைய உள்ளங்கள்

**அ. ம. யேசுராசா**

மனிதனை மீட்பதற்கு மனுவுரு எடுத்த இறைவன் மாட்டுத் தொழுவத்திலே அவதரித்தார். இவரது பிறப்புச் செய்தி கேட்டதும் மந்தை மேய்த்துக் கொண்டிருந்த இடையர்கள், பாலகன் பிறந்திருந்த இடத்தையடைந்து, அங்கு பாலகன் இயேசுவை ஆராதித்து, புகழ்ந்து பாடினர். மீட்பராம் யேசு, யூதா கோத்திரத்தில் அவர் அவதரிப்பார் என இஸ்ராயேல் மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தாலும், அவர்கள் அரசராகவே அவர் தோன்றுவார் என எண்ணியிருந்ததால், பாலன் யேசுவை ஏற்றுக்கொள்ளத் தயங்கினர். இதனாலே, யேசுவை யூதர்கள் கலகக்காரன், புரட்சிக்காரன் என நாமகரணம் சூட்டி சிலுவையில் அறையவும் செய்தனர். யேசு பிறந்த செய்தியைக் கேள்வியுற்ற ஏரோதுமன்னன் பாலகன் யேசுவின் அரசு இவ்வுலகைச் சார்ந்ததாயிருக்குமோ என அஞ்சி, இரு வயதுக்குட்பட்ட ஆண்குழந்தைகளையெல்லாம் கொல்வித்தான். ஆயினும் இக்கொடூர ஆபத்திலிருந்து பாலகன் யேசுவை காப்பதற்காக, தேவதூதனது அறிவுறுத்தலின்படி யேசுவின் தாயாகிய மரியாளும் தந்தை சூசையும் பாலகனை எகிப்துக்கு எடுத்துச் சென்றிருந்தனர்.

பாலகன் யேசு, இவ்வுலகை மீட்பதற்காக, மனுக்குலத்தின் மீது கொண்ட எல்லையற்ற அன்பின் நிமித்தமே மனித வடிவங்கொண்டு ஏழ்மையும், தாழ்மையும், உடையவராக அவதரித்தார் என்பதை நாம் அறியலாம்.

ஆனால் பாலகன் யேசு அவதரித்து இரண்டாயிரம் ஆண்டுகளாகியும், பாரெங்கும் அன்புள்ளங்களை அருமையாகவே காணமுடிகிறது. பொறாமை, அகங்காரம், ஆணவம் முதலிய தீக்குணங்களால் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் கட்டிய பாவத்தின் விளைவிலிருந்து எம்மையெல்லாம் மீட்கவே இறைவன் தனது திருக்குமாரனை எல்லையில்லா அன்பின் காரணமாக இவ்வுலகிற்கு அனுப்பினார். இன்று மனுக்குலத்திடையே மலிந்துள்ள சுயநலம், போட்டி, பொறாமை, அகங்காரம், ஆணவம் என்பன மனித குலத்தை அழிவுக்கே இட்டுச் செல்கின்றன, எனவே,பாலன் பிறப்பு விழாவைக் கொண்டாடும் பாரெங்கும் பாலன் பிறப்பால் உணர்த்தப்பட்ட படிப்பினைகள் வலுப்பெற்று மனுக்குலத்தினிடையே சாந்தியும், சமாதானமும் தழைத்தோங்க வேண்டும். சுயநலமும் அகங்கார ஆணவ உள்ளங்களும், பொதுநலமும், தாழ்மையும் கொண்ட உள்ளங்களாக மாறவேண்டும். இதன் மூலமே பாலன் பிறப்பினைக் கொண்டாட உரிமையுள்ளவர்களாக மனுக்குலம் மாறவேண்டும் எனப் பாலகன் யேசு விரும்புகின்றார்; ஆசிக்கின்றார்.

---

## சிரி! சிரி!! சிரி!!!

**வாலிபன்;** மிஸ் நான் உங்களைக் காதலிக்கிறன்!

**சட்டை அணிந்த பெண்;** எதற்கும் என் கணவரிடம் ஒரு வார்த்தை கேட்டுச் சொல்லுறன்.

**வாலிபன்;** ? ? ? ?

卐 卐 卐

**பாட்டி;** (திருமண வீட்டில்) மேளை கூறை உடுக்கவில்லையே?

**மணப்பெண்;** பாட்டி இது டிஸ்கோ வெடிங். சட்டை போட்டுத் தான் கைப்பிடிக்கிறது.

**பாட்டி:** ? ? ? ?

卐 卐 卐

**அர்ச்சகர்:** (கோவிலில்) ஓம் சியாமளா, கோணேஸ்வரி, மகேஸ்வரி, துர்க்கா, பரமேஸ்வரி...

**அர்ச்சகரின் மூத்த மகள்;** பரமேஸ்வரி தான் வரவில்லை அப்பா. மற்றவர்கள் எல்லோரும் இங்கே நிற்கிறோம்.

- கி. இராஜராஜேஸ்வரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பாடலைப் பாடியவர் உங்களுக்கெல்லாம் நன்கு தெரிந்த ஈழத்துப் புலவரொருவர். அவர் யார்?

6) பாம் (Palm) என்பது எதனைக் குறிக்கின்றது?

7) கொழும்பிலுள்ள, பிரபல்யமான உல்லாசப் பிரயாணிகள், வெளி நாட்டவர்கள் தங்கும் ஹோட்டல் ஒன்றில் பனையின் பெயரைக் கொண்ட போசனசாலை "Palmyrah Restaurant" (பல்மைரா றெஸ்ரோறன்ற்) ஒன்று அமைந்துள்ளது. இந்த ஹோட்டல் காலி வீதியில் உள்ளது. இந்த 'Palmyrah Restaurant' அமைந்துள்ள ஹோட்டல் எது?

8) பதநீர் என்று அழைக்கப்படும் கருப்ப நீரிலிருந்து பல உணவுப் பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இப்பதநீர் உற்பத்திப் பொருட்கள் மூன்று கூறுக.

9) பனங்கிழங்கு செங்கால் நாரைப் பறவையின் மூக்கை ஒத்திருக்கும். எனவேதான் புலவர் ஒருவர் செங்கால் நாரையின் வாயைப் 'பழம் படு பனையின் கிழங்கு பிளந்தன்ன பவளக் கூர் வாய்ச்'செங்கால் நாராய்' என்று பாடியுள்ளார். பனங்கிழங்கை நாரையின் அலகுக்கு ஒப்பிட்டுப் பாடிய அப்புலவர் யார்?

10) தமிழ் நாட்டிலுள்ள பிரபல்யமான மாளிகை ஒன்றுக்குப் பனையின் உற்பத்திகளில் ஒன்றின் பெயர் சூட்டப்பட்டுள்ளது. அம்மாளிகையின் பெயரென்ன?

**கற்பகம் அறிவுப் போட்டி . இல: 1**

முழுப்பெயர் :- ..............................................................

விலாசம் :- ..............................................................

..............................................................

மாணவராயின்
பாடசாலை : ..............................................................

கல்வி பயிலும் வகுப்பு: ..............................

திகதி: ..................          ..............................
கையொப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கசிப்பு விற்பனையைத் விழிப்புக் குழு!

அரியாலையில் சட்ட விரோதமாக மேற்கொள்ளப்பட்டுவரும் கள், கசிப்பு விற்பனையை ஒழித்துக் கட்டும் முகமாக அரியாலை, தெற்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் விழிப்புக் குழுவொன்றை அமைத்துள்ளது.

அரியாலையிலுள்ள சன சமூக நிலையங்களின் பிரதிநிதிகளையும், சங்கப் பிரதிநிதிகளையும் கொண்டதாக இவ் விழிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது இவ் விழிப்புக் குழு மேற்கொண்ட

## ஐ. ஆர். டீ. பீ. திட்டத்தின் கீழ் பனை அபிவிருத்தி

ஐ. ஆர். டீ. பீ. எனப்படும் ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வவுனியா, மன்னார், மாவட்டங்களில் பனை சம்பந்தமான கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது பனம் விதை நடுகையிலான சமூக காடாக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுவருகின்றது.

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டமும் இத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு பனை அபிவிருத்தி வேலைகள் துரிதப் படுத்தப் பட்டு உள்ளன.

## தற்போதைய தலைவர் மீண்டும் தெரிவு

ஊர்காவற்றுறை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம் மாதம் 15 ம் திகதி நடைபெற்ற போது தற்போதைய சங்கத் தலைவர் திரு, கு. மத்தியாஸ் மீண்டும் தலைவராகப் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

நாரந்தனை கள் போத்தலடைபபுத் தொழிற்

கற்பகம்
வாசகர்களுக்கு
எமது
நத்தார்
வாழ்த்துகள்
உரித்தாகுக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திகள்

## தடுக்க

தீவிர நடவடிக்கையின் பயணுகச் சங்கப் பரப் பெல்லைக்குள் வேறிடங்களில் இருந்து 'கள்' கடத்தப்படுவது தடுக்கப்பட்டு. உள்ளதுடன், சட்ட விரோதகள், கசிப்பு விற்பனை தொண்ணூறு சதவீதம்

– 38ம பக்கம் பார்க்க

## மத்தியாஸ் ஆணர்

சாலை மண்டபத்தில் இவ் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. யாழ். மாவட்ட கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எஸ். வேலாயுதம்பிள்ளை பிரதம விருந்தினராகவும், ஊர்காவற்றுறை மக்கள் வங்கி முகாமையாளர் திரு கே. சேயோன், வேலணை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு செ. அரசரத்தினம், வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச்

– 38ம் பக்கம் பார்க்க

## தீபாவளி போனஸாக 99,000 ரூபா

வலி கிழக்கு (தென் பகுதி) தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கம் தனது அங்கத்தவர்களுக்குத் தீபாவளிப் பண்டிகையின் போது இரண்டாம் தடவைப் பணமாக (போனஸ்) 99,000 ரூபாவை வழங்கி உள்ளது.

இச்சங்கம் தனது ஊழியர்களுக்கு ஒரு மாத அடிப்படைச் சம்பளத்தை ஊக்குவிப்புக்கொடுப்பனவாகவும் வழங்கியிருக்

– 38ம் பக்கம் பார்க்க


உங்கள் இல்லத்திற்கு வரும் விருந்தினர்களை
வரவேற்று உபசரிக்க

இனிய வைபவங்கள் சிறக்க
எம்மை நாடுங்கள்!

O இருப்புக் கதிரைகள்
O வாங்குகள்
O எவர்சில்வர் கப்
O றே

குறைந்த வாடகை! நிறைந்த பயன்!

**அரியாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவு சங்கம்**

இல. 15, நடுத்தெரு லேன்,
கண்டி வீதி, அரியாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கரிப்பு....

– 37ம் பக்கத் தொடர்

கட்டுப் படுத்தப் பட்டு இருப்பதாகவும் அரியாலை தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவரும் வடமாகாண தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சமாஜத் தலைவருமான திரு. தி. சிவலிங்கம் தெரிவித்தார்.

இத்தகைய சமூகவிரோதச் செயல்களைத் தடுக்கவும், சங்க வளர்ச்சிக்கு உதவவும் அரியாலைப் பகுதிச் சன சமூக நிலையங்கள் வழங்கி வரும் ஒத்துழைப்பு விழிப்புக் குழுவின் நடவடிக்கைகள் வெற்றி பெற மூலகாரணமாக உள்ளது என்றும் அவர் மகிழ்ச்சி தெரிவித்துக் கொண்டார்.

### தீபாவளி...

– 37ம் பக்கத் தொடர்

கிறது. தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையிலும் பெரும்பாலான தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் நட்டத்தில் இயங்கி ஊழியர்களை ஆட்குறைப்பு செய்து வருகின்ற போதிலும், இச் சங்கம் அங்கத்தவர்களின் ஒத்துழைப்பினுலும், ஊழியர்களின் சேவை மனப்பான்மையினுலும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்ககூடிய முறையில் இயங்கி வருகின்றது என்று சங்கப் பொது முகாமையாளர் திரு. மு. வேலய்யா கற்பகத்திற்குத் தெரிவித்தார்.

### தற்போதைய...

- 37ம் பக்கத் தொடர்

சமாஜப் பொது முகாமையாளர் திரு. ஆ. ந. இராஜேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

புதிய இயக்குனர் சபைக்கான தேர்தலில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டு உள்ளனர்.

தலைவர்- திரு. கு. மத்தியாஸ், உபதலைவர்– திரு. இ. இரத்தினம், செயலாளர், திரு. செ. செபமாலை, உறுப்பினர்கள் திருவாளர்கள் யதி அமலதாஸ், அ. மங்களதாஸ், அ. லோரன்ஸ், சு. கருணுநிதி ஆ. நாகராஜா, செ. சிறில்,

## பழி கேட்ட பாரதி......?

நற்குணங்களை நல்லளவு கோல்களென்று
நானிலத்தோர் நங்கையரை அளந்து வந்தார்
பொங்கி எழுந்தானே புதுமைக் கவி பாரதியும்
பொருந்தாதா மற்றவர்க்கும் நாற்குணங்கள் என்றுனே
புதுமையென நினைத்த பெண்களோ இன்று தம்
ஆடையையும், கூந்தலையும் சிறிதாக்கிக் கொண்டார்கள்
பண்பாடு அழியுதென்று பார்த்தோர்கள் வைதார்கள்
பாவம் அவன் பாரதியும் பழிச் சொல்லுக்காளானுன்.

— இராகி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனைக்கு வரி: இன்று அல்ல ஒல்லாந்தர் ஆட்சியில்

எமது மக்களின் வாழ்க்கையோடு தொன்றுதொட்டுப் பின்னிப் பிணைந்து உள்ள பனைவளம் இன்று உலகின் தேசிய வளங்களில் ஒன்றாகப் பிரகடனப் படுத்தப்பட்டு உள்ளது எமக்குப் பெருமிதமூட்டுவதாக இருக்கிறது.

நாம் ஆரம்ப காலத்தில் பனையின் முக்கியத்துவத்தை உணரத் தவறிவிட்டபோதிலும், ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தின்போது பனையின் வருமானத்தை அறிந்துகொண்ட ஒல்லாந்த ஆட்சியினர் ஒவ்வொரு பனைக்கும் ஒரு காசுவரிவிதித்து இருந்தனர். இது வரலாற்று உண்மையாகும்.


## ஏழ்மையை விரட்ட...

பதநீரைத் தேனுக்கு ஒப்பான இனிய வெல்லமாக மாற்ற முடியும். இவ்வெல்லம் கரும்பு வெல்லத்தைவிடச் சிறந்தது. கரும்பு வெல்லம் கருமையானது. ஆனால் பனை வெல்லமோ இனிப்பும் அதைவிட ருசியும் உடையது. இதில் அநேக விதமான உலோக உப்புகள் உள்ளன. வைத்தியர்கள் என்னிடம் வெல்லம் சாப்பிடச் சொன்னார்கள். அதனால் நான் எப்பொழுதும் பனை வெல்லமே சாப்பிடுகிறேன். ஆலைகளில்கூட உற்பத்தி செய்யமுடியாத முறையில் இயற்கை இந்தப் பொருளை உண்டாக்கியிருக்கிறது. இவ்வெல்ல உற்பத்தி குடிசைகளிலேயே நடைபெறுகிறது. பனைமரங்கள் உள்ள இடங்களில் இதைச் சுலபமாக உற்பத்தி செய்யலாம். ஆந்திராவில் ஆயிரக்கணக்கான பனைமரங்கள் உள்ளன. அங்கு ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வெல்லம் தயாராகிறது. செய்யப்படுகிறது. இந்த நாட்டிலிருந்து ஏழ்மையை விரட்ட இது ஒரு வழி. இது ஏழ்மைக்கு மாற்று மருந்தாகவும் அமையும்''

– மகாத்மாகாந்தி

மேலுறைகளைச் சேகரித்தனுப்பி பரிசில்களைப் பெறுங்கள்!

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல. 77 யாழ்ப்பாணம்

**மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்கி உபயோகியுங்கள்!**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று செய்தி நாளை வரலாறு

## டிசம்பர்

1. இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதற்கு இந்தியா ஒருபோதும் உடன்படாதென்று இந்தியத் தூதுவர் டிக்ஸிற் பந்தோபஸ்து அமைச்சரிடம் தெரிவித்துள்ளார்.

3. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள பயங்கரவாதப் பகுதித் தமிழர்களுக்கு விசேட அடையாள அட்டைகள் வழங்க அரசு முடிவு.

4. பொங்கல் தினத்திலிருந்து சிங்கிரைப் புத்தாண்டு வரை தோட்டத் தொழிலாளர்கள் பகல் 12 மணி வரைக்கும்வேலை செய்வதில்லை என்று இ தொ. காங்கிரஸ் முடிவெடுத்தது.

6. பாரத வெளிநாட்டமைச்சர் பஹத், "இலங்கையில் அபாய நிலை தமிழ்மக்கள் பெருமளவில் கொல்லப்படுகிறார்கள்"

8. டாக்காவில் ராஜீவும் – ஜே. ஆரும் இரகசியப் பேச்சு வார்த்தை நடத்தினர்.

11. தமிழர் விடுதலைக் கூட்டணியின் யோசனைகளை இலங்கை ஆராயவேண்டுமென்று பாரதப் பிரதமர் அறிவித்துள்ளார்.

15. முல்லைத்தீவு மாவட்ட அகதிமுகாம்களை மூடிவிடுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

16. பூநகரி தாம்போதி யாழ். அரச அதிபரினால் திறந்துவைக்கப்பட்டது.

19. படையினர் கட்டுப்பாட்டுடன் நடந்தால் பிரச்சினை தோன்றாது என்று கண்காணிப்புக் குழு அறிக்கை.

21. சுதுமலை, தாவடி, மானிப்பாயில் இரு பகுதியினரும் நேரடிச் சமர்.

23. "வடக்கு - கிழக்கு இணைப்பு இல்லை" - லலித்

25. "தமிழர் பிரச்சினை தீரும்வரை வம்சாவழிப் பிரஜைகளைப் பாரதம் ஏற்காது" – ராஜீவ்

---


**உங்களுக்கு ரூபா 100/.**
**பரிசு காத்திருக்கிறது!**

நவம்பர் இதழில் வெளியான பெட்டிக்குள் இருப்பது என்ன?
கவிதைப் போட்டி முடிவுகள் பொங்கல் மலரில் வெளியிடப்படும்.


(ஆ – ர்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குதூகல வாழ்வுக்கு இல்லந்தோறும்
பனம் பொருட்கள்




- பாணிப் பனாட்டு
- பனம் சிரப்
- பனம் பானம்
- பனம் கோடியல்
- பனம் ஜாம்
- அழகிய கைப்பணி, அழகுசாதனப் பொருட்கள்

கற்பகம் விற்பனை நிலையங்களை நாடுங்கள்!

பனம் பொருள் அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்புச் செயலகம்
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23801, 22094

வடமாகாண தெ. ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தினரால், கண்டி வீதி, யாழ்ப்பாணம் சாயிபாபா அட்வர்டைசிங் அசோசியேற்ஸ் அச்சகப்பகுதியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org